பக்கங்கள்:12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 24 வியாழக்கிழமை 07.04.2022 கதிர் 153

இது ரகசியம் அல்ல!

நாடாளுமன்றத்தில் சபாநாயகர், பிரதி சபாநாயகர் ஆகியோருக்கு அடுத்து சபையை நடத்தும் பொறுப்பு குழுக்களின் பிரதி தலைவருக்கு உரியது.

வரிசையாக இப்பதவியில் தமிழர்களே பெரும்பாலும் இருந்து வருகின்றனர். 2

## சுமந்திரன் நாடாளுமன்றில் காட்டம்

# போருக்குக் கொட்டியதால் பொருளாதாரம் கெட்டது!

## கோட்டாவின் கொள்கைகளால் கோட்டை போனது இலங்கை



கொழும்பு, ஏப்ரல் 07

"நீங்கள் தமிழர்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் காற்றில் பறக்க விட்டீர்கள். அதனால்தான் யுத்தம் வெடித்தது. போரை நடத்துவதற்காகப் பெருந்தொகைப் பணத்தை கண்மூடித்தனமாகக் கடன் வாங்கிக் கொட்டினீர்கள். அதனால் நாட்டின் பொருளாதாரம் அடியோடு கெட்டது. போதாக்குறைக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முற்றிலும் தவறான கொள்கைகளால் – நடவடிக்கைகளால் – மீளமுடியாத அதலபாதாளத்தில் நாடு சறுக்கி வீழ்ந்தது."

– இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் காட்டமாகக் கூறினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன். 10

## ராஜபக்ஷக்களின் இல்லங்களுக்கு முன்னால் போராட்டம் நடத்துங்கள்!

இப்படிக் கோருகின்றார் சாணக்கியன்



ராஜபக்ஷக்களின் வீடுகளுக்கு முன்னால் சென்று போராட்டம் நடத்துங்கள் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேட்டுக்கொண்டுள்ளார்.

நேற்று நாடாளுமன்றில் உரையாற்றிய அவர், மக்கள் 2

## இன்று தவறினால் நாளை அமைச்சரவை பதவியேற்பு

### 121 எம்.பிக்களின் முழு ஆதரவு இருப்பதாக மொட்டுக்கட்சித் தரப்பில் உறுதி தெரிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 07

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான ஆளும் கூட்டமைப்பின் புதிய அமைச்சரவை இன்று பதவியேற்கும் என்று இன்று அதிகாலையில் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. இந்தப் பதவியேற்பு இன்று இடம் பெறாவிட்டால் நிச்சயமாக நாளை நடைபெறும் எனவும் கூறப்பட்டது. 2

## 76 ஆயிரம் மெ.தொன் எரிபொருள் வருகிறது

### இந்தியாவிலிருந்து அனுப்பிவைப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.07

இலங்கைக்கு இந்தியா கடனாக வழங்கிய நிதியுதவியில் கடந்த 24 மணித்தியாலங்களில் 36 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோல் மற்றும் 40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் என்பன அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேநேரம் 2

## ஜனாதிபதி ஆட்சி முறைமையுடன் ஒற்றையாட்சியையும் ஒழியுங்கள்!

### சிங்கள மக்களிடம் கஜேந்திரகுமார் வேண்டுகோள்



நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை ஒழிப்பது மட்டுமல்ல, 74 வருட ஒற்றையாட்சி முறைமை ஒழிக்கப்படல் வேண்டும். தமிழ்த் தேசமும், சிங்கள தேசமும் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி (கூட்டாட்சி) முறைமையை ஏற்படுத்துவதற்கு நீங்கள் இணங்கவேண்டும். இதுவே இன்றைய நெருக்கடியிலிருந்து நிரந்தரமாக மீண்டெழ ஒரே வழி என நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் கஜேந்திரகுமார் எம்.பி.

இலங்கையின் இன்றைய நெருக்கடி நிலை தொடர்பில் நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 10

## அம்பாந்தோட்டையில் இருவர் சுட்டுக்கொலை

### விபத்து என மூடி மறைக்க முயற்சி

அம்பாந்தோட்டை பிரதேசத்தில் இருவர் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இக்கொலை சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாகன விபத்தில் 2

## பவுண் விலை வீழ்ச்சி

இலங்கையில் நேற்று தங்கத்தின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளதாக அகில இலங்கை நகை வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி, 22 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 175,800 ரூபாவாகவும் மற்றும் 24 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 190,000 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

இதேவேளை, 2

## பதவி விலகார் கோட்டாபய!

### அமைச்சர் ஜோன்ஸ்டன் திட்டவட்டமாக அறிவிப்பு



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எந்தச் சந்தர்ப்பத்திலும் பதவி விலக மாட்டார் என 2

## ஜோன்ஸ்டனின் அலுவலகமும் சுற்றிவளைப்பு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் பிரதமர் உட்பட ஏனைய ராஜபக்ஷக்களுக்கும் ஆதரவாக முழு அளவில் பகிரங்கமாகக் குரல் 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னர் ஜே.வி.பியின் சந்திரசேகரன், ஈ.பி.டி.பியின் சந்திரகுமார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் அலங்கரித்த பதவி இது. இப்போது சுதந்திரக் கட்சியின் அங்கஜன் இராமநாதன் இப்பதவியில் இருக்கின்றார்.

மும்மொழி ஆளுமை, ஆங்கிலக் கல்வியால் பெற்ற மேதாவிலாசம், உடல்வாகு, தோற்றம், குரல், நடத்தை முறைமை போன்றவற்றால் இந்தப் பதவிக்குப் பெருமையும் கண்ணியமும் சேர்க்கின்றார் அவர் என்ற உண்மையைப் பதிவு செய்துதானாக வேண்டும்.

அதுவும் நேற்று சபைக்கு அவர் தலைமை வகித்த நேரம், பிரதான எதிர்க் கட்சியின் முக்கிய புள்ளி ஒருவர் அவருக்கு உரிய மரியாதையைத் தராமல் அகௌரவமாக சொல்லாடல் மேற்கொண்டார் என்பதற்காக அந்தப் புள்ளி பேசுவதற்கு அனுமதியே தராமல் பிடிவாதம் பிடித்து உறுதியாக நின்றார் அவர். அந்த தலைமைத்துவத் தெளிவும் உறுதியும் மெச்சப்பட வேண்டியவைதான்.

'நான் இப்போது இந்தச் சபைக்குத் தலைமை தாங்கும் சபாநாயகர் ஆசனத்தில் இருக்கிறேன். அதற்கு மரியாதை தராத உங்களுக்கு பேசச் சந்தர்ப்பம் தரமாட்டேன். முதலில் நீங்கள் கூறிய – சபைக்குப் பொருத்தமற்ற – வார்த்தைகளை வாபஸ் பெற்று, மன்னிப்புக் கேளுங்கள். பிறகு பேச சந்தர்ப்பம் தருவதா என்பதை ஆலோசிக்கிறேன்' என்ற சாரப்பட, சத்தத்துடன், அதே சமயம் மிகத் தெளிவான உறுதியுடன் அங்கஜன் இராமநாதன் பிடிவாதமாக நின்றமையைப் பார்க்கும்போது அவரது ஆளுமை தூள் கிளப்பியது தென்பட்டது.

கடைசியாக, சபைக்குத் தலைமை வகிக்கும் பொறுப்பை விட்டு அவர் இறங்கும் வரை அந்த சிரேஷ்ட புள்ளி தமது பேச்சுக்கான சந்தர்ப்பத்திற்காகக் காத்திருக்க வேண்டி நேர்ந்தது. அவர் இறங்கிய பின்னர்தான் அந்த வாய்ப்பு அந்தப் புள்ளிக்குக் கிடைத்தது.

அங்கஜன் இராமநாதன் தலைமை வகித்த போதுதான் 'சபைக்குத் தலைமை தாங்கும் கௌரவ உறுப்பினர்' என்று அவரை விளித்தபடி சுமந்திரன், சாணக்கியன் போன்றோர் நேற்று உரையாற்ற வேண்டியிருந்தது.

குழுக்களின் பிரதித் தலைவர் என்ற முறையில் அங்கஜன் இராமநாதன் கொடிகட்டிப் பறந்தாலும், யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பதவி இனி அவரிடம் இல்லை என்பதுதான் கள நிலைமை எனத் தெரிகிறது. கொழும்பு அரசியல் புயல் ஓய்ந்ததும், யாழ். ஒருங்கிணைப்புக்குழுத் தலைமை டக்ளஸ் தேவானந்தா கைகளுக்கு மாறும் என அரச உயர் வட்டாரம் தெரிவித்தது.

அரச பணியை 'மக்கள் சேவையே மகேசன் சேவை'யாக ஆற்றாமல் 'அமுல் பேபி சேவை'யாக நடத்திய அதிகாரியும் பந்தாடப்படுவார் என்பது உறுதியாகி உள்ளது.

அரசியல் புயல் ஓய்ந்த கையோடு இவை நடக்கும் எனக் கூறப்பட்டது.

இன்னொரு முக்கிய விடயமும் உண்டு.

நேற்றிரவு அலரி மாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடந்த அரச தரப்பு எம்.பிக்களின் கூட்டத்தில் ஒரு விவகாரம் கோடி காட்டப்பட்டதாக அறிய வந்தது.

கடந்த இரண்டரை ஆண்டுகளாக அரசின் சகல தீர்மானங்களும் ஜனாதிபதி கோட்டாபயவின் விருப்புக்கும், இசைவுக்கும் இணங்கவே நடந்தன. பிரதமர் பட்டும்படாமலும் ஒதுங்கியே இருந்தார் – முடிவுகளைத் தம்பியிடம் விட்டுவிட்டு.

அதனால் ஏற்பட்ட அதிருப்திகள் குறித்து ராஜபக்ஷகளுடன் சேர்ந்து இயங்கி வரும் மூத்த அரசியல் தலைவர்கள் பெரும் குறையாகச் சுட்டிக் காட்டினர்.

இனி, அரசியல் விடயங்களில் முக்கிய தீர்மானங்கள் – முடிவுகள் – எடுப்பதில் தமது பங்களிப்பு கணிசமாக இருக்கும் என்று கோடி காட்டினாராம் பிரதமர். புதிய அமைச்சரவையைத் தீர்மானிப்பதில் கூட அவரின் காத்திரமான பங்களிப்பு இருக்கும் என்று கூறப்பட்டது.

ஆனால் வயது முதிர்ந்து, தளர்ந்து இருக்கும் பிரதமரினால் இதுவிடயத்தில் எவ்வளவு தூரம் பங்காற்ற முடியும் என்பது சந்தேகமே.

எல்லோர் மனதிலும் இப்போது எழும் கேள்வி ஒன்றுதான். ஆட்சியைத் தக்க வைப்பதற்கான எண்ணிக்கை – 113 எம்.பிக்களின் ஆதரவு – அரசுக்கு உண்டா என்பதே.

நல்லாட்சி அரசின் காலத்தில் பிரதமராக இருந்த ரணிலை வீழ்த்த, மஹிந்த ராஜபக்ஷவைப் பின்கதவால் பிரதமராக்கினார் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. அறுதிப்பெரும்பான்மை பெறாத அந்த அரசை வைத்துக் காலத்தை ஓட்ட முயற்சித்தார் மஹிந்தர்.

எதிர்க்கட்சித் தரப்பில் போய் அமர வேண்டிய கட்டாயத்தில் இருந்த ஐ.தே.க. உறுப்பினர்கள் விடவில்லை. ஆளும் தரப்பு மீது நம்பிக்கை இல்லை என்று அடுத்தடுத்து மூன்று நாள்கள் தனித்தனி பிரேரணை கொண்டு வந்து, அவற்றை வெற்றிகரமான தீர்மானங்களாக நிறைவேற்றினர்.

ஆனால் அதே கைங்கரியத்தை கடந்த இரண்டு நாள்களாக நடந்த நாடாளுமன்ற அமர்வுகளில் எதிரணியினரால் முன்னெடுக்க முடியவில்லை. அவர்கள் அதற்கு முயலவுமில்லை. இன்றும் கூட அவர்கள் அதனைச் செய்ய மாட்டார்கள்.

மாற்று அரசை அமைப்பதில் மட்டுமல்ல, இருக்கும் அரசை வீட்டுக்கு அனுப்புவதிலும் கூட எதிரணிக் கட்சிகள் தமக்குள் ஒன்றுபட மாட்டா என்பது அவற்றுக்கே நன்கு தெரியும்.

அது ஒன்றுதான் ராஜபக்ஷக்களுக்கு இன்றைய நிலையில் 'பிளஸ் பொயின்ட்'. அதை வைத்தே அவர்கள் இந்த அரசின் காலத்தை ஓட்டி விடுவார்கள்.

ஆனால் சீற்றத்துடன் களத்தில் இறங்கியிருக்கும் பொதுமக்களை அவர்கள் எதிர்கொள்வது சாமானியமான விடயமாக அமையப் போவதில்லை.

மக்களின் எழுச்சிப் போராட்டங்களின் உத்திகளில் அடுத்து வரும் தினங்களில் பெரும் மாற்றங்கள் இருக்கின்றன எனக் கிசுகிசுக்கப்படுகின்றது.

தலைநகரிலும் பிற இடங்களிலும் கேந்திர மையங்கள் முன்னால் போராட்டம் நடத்தப் போகும் பொதுமக்கள், தொடர்ந்து அங்கிருந்து நகராமலேயே நிலையாக – நிலை கொள்வர். இரவு பகலாகக் குந்து மறியலில் ஈடுபட்டு, நாள் கணக்கில் அதைத் தொடர்வர் என்றும் கூறப்படுகின்றது.

பதவியில் இருந்து இந்த ஜனாதிபதி இறங்கும் வரை இந்தக் குந்துமறியல், வழிமறிப்புப் போராட்டம் அந்தந்த இடங்களில் நிலையாக நீடிக்கும் என்பது ஏற்பாட்டாளர்களின் திட்டமாம்.

போராட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு மூன்று நேர உணவில் இருந்து பிற விடயங்கள் வரை வசதிகள் அளிக்கப்பட வேண்டும். பெரிய பின்புலம், நிதி ஒழுங்குகள், உதவிகள் அவசியம்.

வல்லரசு Back up கூடக் கிடைக்கும் என்று பேச்சு அடிபடுகிறது.

ஒரு கரை கண்டுதான் விவகாரம் முடிவுக்கு வரும் போல தோன்றுகின்றது.

12ஆம் திகதி குருமாற்றம் வரைத் தாக்குப் பிடித்தால் பிறகு சமாளித்து விடலாம் என்று ராஜபக்ஷகளுக்கு ஆருடம் கூறியிருக்கிறாராம் ஞானக்கா. குரு மாற்றத்தில் தூக்கிக் கடாசப்படப் போகின்றவர்கள் யார் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

– மின்னல் –

## இன்று தவறினால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று இரவு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அலரி மாளிகை இல்லத்தில் நடைபெற்ற ஆளும்கட்சி எம்.பிக்களின் கூட்டத்தில் 121 எம்.பிக்கள் பங்குபற்றினர் எனவும், புதிய அமைச்சரவை உருவாக்கத்துக்கு அவர்கள் முழு ஆதரவு வெளியிட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர், விமல் வீரவன்ஸவின் தரப்பைச் சேர்ந்தவர்கள், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்தவர்கள் என மொத்தம் முப்பத்தி மூன்று எம்.பிகளைத் தவிர்த்தே இவ்வாறு 121 எம்.பிக்கள் பிரதமரின் இல்லத்தில் நேற்றிரவு நடந்த கூட்டத்தில் பங்குபற்றினர் என்று ராஜபக்ஷவுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்று அல்லது நாளை சுமார் பதினைந்து பேர் கொண்ட அமைச்சரவை பதவி ஏற்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அது பின்னர் காலகதியில் விரிவாக்கம் செய்யப்படும் என்றும் கூறப்பட்டது. தற்போதைய அரசியல் நெருக்கடிகளை எதிர்கொண்டு, புதிய அமைச்சரவையை நியமித்து, விடயங்களைக் கையாள்வது குறித்து நேற்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டதாகத் தெரிகிறது. அரசின் முக்கிய விடயங்களை இனிமேல் பிரதமரே நேரடியாக எடுத்துக் கொள்வார் என்ற தகவல் நேற்றைய கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டதாகவும் அறிய வந்தது.

## ஜோன்ஸ்டனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எழுப்பி வரும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் குருநாகல் அலுவலகம் நேற்று ஆர்ப்பாட்டக்காரர்களால் சுற்றி வளைக்கப்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு சவால் விடுவது போல குருநாகல் மேயர் தமது ஆதரவாளர்களைத் திரட்டி அலுவலகத்தில் கூட்டம் நடத்திய போதும், குருநாகலில் பேரணியில் ஈடுபட்ட மக்கள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் அலுவலகத்தை சுற்றி வளைத்தனர். அதனால் அப்பகுதியில் நீண்ட நேரம் பதற்றம் நிலவியது.

## 76 ஆயிரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதுவரை இந்திய அரசின் நிதி உதவியுடன் மொத்தமாக வழங்கப்பட்ட எரிபொருளின் அளவு 2 லட்சத்து 70 ஆயிரம் மெட்ரிக் தொன்கள் எனவும் இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் நிலவும் கடும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள இந்தியாவினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட நிதி உதவியில், இலங்கையில் அதிக நெருக்கடியை ஏற்படுத்தியுள்ள எரிபொருளே கொள்வனவு செய்யப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## அம்பாந்தோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த மரணங்கள் இடம்பெற்றுள்ளன எனத் தெரிவித்து உண்மைகளை மூடி மறைக்க முற்பட்டுள்ளமை பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

அம்பாந்தோட்டை மாமடல பிரதேசத்தில் மாடுகள் இரண்டை அழைத்துச் செல்ல வந்த இருவருக்கும் மாட்டு உரிமையாளருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

அம்பாந்தோட்டை மாமடல பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிக்கி அங்குனகொலபெலஸ்ஸ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இந்த இருவரும் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இவர்களை வைத்தியசாலையில் சேர்த்த போது கூறியமை போன்று மாமடல – ரத்னவீர பாலத்திற்கு அருகில் விபத்து ஏதும் இடம்பெறவில்லை என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர்கள் அம்பலாந்தோட்டை மற்றும் சூரியவெவ பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் பல விசேட பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

## பவுண் விலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடந்த வாரத்தில் 22 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 195,000 ரூபாவாகவும் மற்றும் 24 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 205,000 ரூபாவாகவும் கொழும்பு செட்டித் தெருவில் பதிவாகி இருந்தது.

இந்நிலையில், கடந்த மாதம் 24 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 250,000 ரூபா வரை அதிகரித்துக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ராஜபக்ஷக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமது போராட்டத்தை கைவிடக்கூடாது என்பதே தனது வேண்டுகோள் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை போராட்டத்தில் ஈடுபடுபவர்களை அரசாங்கத்தின் பிரதம கொறடாவான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ 'தீவிரவாதிகள்' எனக் கூறியமைக்கும் அவர் கடும் கண்டனத்தை வெளியிட்டார்.

பால் பக்கெட் ஒன்றினை பெற்றுக் கொள்வதற்காக நீண்ட வரிசையில் காத்திருந்த 89 வயதான தாய் ஒருவரும் தீவிரவாதியா என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

எம்.பிக்கள் 225 பேரும் வெளியேற வேண்டும் என மக்கள் கூறுவதன் அர்த்தம் அமைப்பில் மாற்றம் வேண்டும், நிறுவனங்களை வலுப்படுத்த வேண்டும் என்பதே என்றும் இரா.சாணக்கியன் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை கோட்டாபய ராஜபக்ஷ இராஜினாமாச் செய்துவிட்டு வீட்டிற்கு செல்ல வேண்டும் என்றே இந்த தலைமுறை விரும்புகிறது என்றும், அது நடக்கும் வரை போராட்டம் ஓயாது என்றும் அவர் தெரிவித்தார்.

## பதவி விலகார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

ஜனாதிபதிக்கு 69 லட்சம் பேர் வாக்களித்துள்ளனர் என்பதை லக்ஷ்மன் கிரியெல்லவுக்கு நினைவுபடுத்துகிறேன். ஜனாதிபதி ஒரு போதும் பதவி விலக மாட்டார் என்பதை அரசாங்கம் என்ற விதத்தில் நாங்கள் தெளிவாகக் கூறுகின்றோம். இந்தப் பிரச்சினைக்கு நாங்கள் முகம் கொடுப்போம். – என்றார்.



# பொய்வேடதாரிகளான தமிழ்க் கூட்டமைப்பினர் வடக்கு கிழக்கிலிருந்து அடித்துத் துரத்தப்படுவர்

## முன்னணியின் தேசிய அமைப்பாளர் சுரேஷ் காட்டம்

தமிழ் மக்களின் ஆணையைப்பெற்று இன்று பொய்யான வேடதாரிகளாகச் செயற்பட்டு வரும் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் விரைவில் வடக்கு, கிழக்கிலிருந்து அடித்து துரத்தப்படுவார்கள் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும், கிழக்கு மாகாண இணைப்பாளருமான தர்மலிங்கம் சுரேஷ் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர் –

இந்த நாட்டில் காலம் காலமாக தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளே இன்று தெற்கில் ஆட்சியாளர்களை விரட்டியடிக்கும் நிலையினை ஏற்படுத்தியுள்ளது.

ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினைகளை இதுவரை காலமும் சிங்கள மக்களுக்குத் தெரியப்படுத்தாது அவர்களுக்குப் பொய்களைக் கூறி இதுவரை காலமும் அந்த மக்களை ஏமாற்றி இந்த நாட்டின் தமிழ் மக்களை அழிப்பதற்காக இனப்படுகொலைகளை செய்வதற்காக அந்நிய நாடுகளிடம் கடனை வாங்கிப் போரை முன்னெடுத்து இன்று கடன் பொறிக்குள் இலங்கை சிக்கியுள்ளது.

இன்று சிங்கள மக்கள் உண்மையை அறிந்திருக்கின்றார்கள். இந்த நாட்டில் தமிழ் மக்கள் தங்களது இருப்புக்காகவும்,சுயநிர்ணயத்துக்காகவும் தங்களது உரிமைக்காகவும் தான் போராடினார்கள் என்ற உண்மை சிங்கள மக்களால் உணரப்பட்டு இன்று ஆட்சியாளர்கள் துரத்தியடிக்கப்படும் நிலை காணப்படுகின்றது.

இதேபோன்று தான் தமிழ் மக்களின் விவகாரத்தில் 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட இனப்படுகொலையையும் கட்டமைப்புசார் அழிப்பையும் 2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் மூடிமறைத்து தங்களது எஜமானர்களின் நலன்களைப் பேணுவதற்காகவும், தங்களது பதவிகளைத் தக்கவைத்துக்கொள்வதற்காகவும் தமிழ் மக்களின் ஆணையைப்பெற்று அதற்கு நேர் எதிர்மாறாக செயற்பட்டு தமிழ் மக்கள் மத்தியில் இரட்டைவேடம் பூண்டு வேடதாரிகளாகச் செயற்பட்டு வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவம் மிக விரைவில் வடக்கு கிழக்கு தமிழ் மக்களினால் அடித்துவிரப்பட்டப்படும் நிலையேற்படும்.

தமிழ் மக்களுக்கு நடந்தது இன அழிப்பு, இந்த இன அழிப்புக்கான சர்வதேச விசாரணைக்கான சந்தர்ப்பங்கள் கிடைத்தபோதேல்லாம் அதனைக் கோராமல் தங்களது பதவிகளுக்காகத் தங்களது பைகளை நிரப்புவதற்காக அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களை முன்கொண்டு சென்று இன அழிப்பு விவகாரத்தை சர்வதேச சமூகத்துக்குக் கொண்டுசெல்லாமல் கோட்டாபய அரசாங்கத்தைப் பாதுகாத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவம் மிக வேகமாக இந்த மண்ணிலிருந்து விரட்டியடிக்கப்படுவார்கள்.

தமிழ்த் தேசிய உணர்வுடன் உள்ள தமிழ்த் தேசியவாதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேற வேண்டும். தொடர்ந்து அங்கு இருப்பீர்களானால் இன்று அரசாங்கம் துரத்தியடிக்கப்படுவது போன்று உண்மையறிந்து தமிழ் மக்களால் ஒரு நாள் துரத்தியடிக்கப்படுவீர்கள் என்பதை எச்சரிக்கையாக விடுக்கின்றேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை இது வரை காலமும் பொய்யைத்தான் தமிழ் மக்களுக்கு சொல்லிவந்துள்ளது.இங்கு சந்திக்கும் வெளிநாட்டு தூதுவர்களிடம் இங்கு இனப்படுகொலை நடைபெறவில்லை,தமிழ் மக்களுக்கு அநீதி நடைபெறவில்லையென்று இங்கு தமிழ் மக்களுக்கு நடந்த அநீதிகளை மூடிமறைத்து வந்துள்ளார்கள்.

இதுவரை காலமும் பொய்களையே கூறிவந்துள்ளனர்.இதனைத் தமிழ் மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். சிங்கள மக்களால் கொண்டுவரப்பட்ட அரசாங்கத்திலேயே அந்த மக்கள் அடித்துத் துரத்தும் நிலையில் இவர்களைப் பாதுகாத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கான பேரம் பேசலைச் செய்யவேண்டும்.



தமிழர்கள் சுயநிர்ணயத்துடன் வாழும் சூழ்நிலையை இந்த நாட்டில் ஏற்படுத்தும் போது தான் இந்த நாட்டில் சிங்கள மக்களும் நிம்மதியாக வாழ முடியும் என்பதைக் கூறவேண்டும்.

இந்த நாட்டில் தமிழ் மக்கள் தீர்வொன்றைப்பெற்று சுதந்திரமாக வாழ வேண்டுமானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடித்துகலைக்கப்பட்டு, தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை முன்னெடுத்துச் செல்கின்ற அரசியல் தலைமைத்துவத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

இந்த நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள நிலையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமானால் 10 வருடங்களுக்கு மேல் செல்லும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இலங்கையைக் கட்டியெழுப்ப வேண்டுமானால் இலங்கை அரசமைப்பில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். அந்த மாற்றத்தை செய்யாமல் இந்த நாட்டை யார் ஆட்சி செய்தாலும் கட்டியெழுப்ப முடியாது.

இந்த மாற்றம் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் சமவுரிமையைக்கொண்டு வாழும் நிலையை அந்த மாற்றம் கொண்டிருக்க வேண்டும். அந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு சர்வதேசம் தலையிடவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

## யாழ். பல்கலை முள்ளிவாய்க்கால் தூபி விவகாரம்; சந்தேகநபர்களுக்கு நீதிமன்று எச்சரித்து விடுதலை

யாழ்.பல்கலைக்கழகத்தின் உள்ளே காணப்பட்ட முள்ளிவாய்க்கால் தூபி கடந்த 2021.01.08 யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்தினரால் இடிக்கப்பட்ட வேளை, பல்கலை மாணவர்கள், அரசியல்வாதிகள், பொதுமக்கள் மற்றும் புலம்பெயர் தேசத்தவர்கள் என அனைவரும் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது யாழ். பல்கலைக்கழக மாணவர்களாகிய இராசரத்தினம் தர்ஷன் மற்றும் பாலசிங்கம் யுகந்தன் ஆகிய இருவரும் கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு இரண்டு மாணவர்களுக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதனையடுத்து 09.01.2021 யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிபதி பீற்றர்போலுடைய வாசஸ்தலத்தில் மாணவர்கள் முற்படுத்தப்பட்டபோது மாணவர்களின் சார்பில் சட்டத்தரணிகளான விஸ்வலிங்கம் திருக்குமரன் மற்றும் விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஆகியோர்முன்னிலையானநிலையில்,சந்தேகநபர்கள் இருவரையும் நீதிவான் 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதி வழங்கினார்.

இந்நிலையில் ஒரு வருடத்துக்கு மேலாக வழக்கு இடம்பெற்றுவந்த நிலையில் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் சார்பில் சட்டத்தரணி பு.பானுப்பிரியன் முன்னிலையாகியிருந்தார்.

இந்நிலையில், செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிபதி அ.ஆனந்தராஜா முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது இரண்டு பல்கலைக்கழக மாணவர்கள் சார்பில் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி ஆர்.ஜனகன், மாணவர்களை தாண்டியும், பல்கலைக்கழகம் சாராத சட்டத்தரணி அரசியல்வாதி மற்றும் பல்கலைக்கழகம் சாராத ஒருவர் உட்பட பல்கலைக்கழகத்துக்கு உட்சென்றவர்கள் எவரும் கைது செய்யப்படவில்லையெனவும், இரண்டு மாணவர்கள் மட்டுமே கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் நீதிமன்றுக்கு எடுத்துரைக்கப்பட்ட நிலையில், நீதிபதியால் மாணவர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

## சால்வையை மறந்து சபைக்கு வந்த சமல்!



எப்போதும் சிவப்பு நிற சால்வையை அணிந்து வரும் முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ஷ கடந்த செவ்வாய்க்கிழமை சாலவையின்றி சபையில் பிரசன்னமாகியிருந்தார்.

சமல் ராஜபக்ஷவிடம் ஏற்பட்டிருந்த இந்த மாற்றம் தொடர்பாகப் பலரும் பேசிக் கொண்டிருப்பதைக் காண முடிந்தது. சமல் ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சியின் முன் வரிசையில் நான்காவது ஆசனத்தில் அமர்ந்திருந்தார்.

இதனிடையே, சால்வை அணியாதமை தொடர்பாக ஊடகவியலாளர்கள் குழு அவரிடம் கேள்வி எழுப்பிய போது, அவர் உறுதியான பதில் அளிக்கவில்லை. 'சால்வையால் பயனில்லை. எனக்கு ஆடை வேண்டும்' என சமல் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

## போதைப்பொருளுடன் இளைஞர்கள் இருவர் கைது

வவுனியாவில் ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து வவுனியா, குருமன்காடு பகுதியில் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே 10 கிராம் ஐஸ் போதைப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மணிபுரம் பகுதியைச் சேர்ந்த 31 வயது மற்றும் 21 வயது இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின் மேற்படி இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் முல்லைத்தீவில் நீரில் மூழ்கிச் சாவு!

முல்லைத்தீவு – ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட ஏம்பல் குளத்தை அளவீடு செய்வதற்காக படகில் சென்ற உத்தியோகத்தர்கள் படகு கவிழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவின், காதலியார் சம்மணங்குளம் கிராம அலுவலர் பிரிவின், ஏம்ப குளத்தில் நில அளவை திணைக்களத்தினர் நில அளவை பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அளவைப் பணியில் வித்தியாபுரம் பகுதியைச் சேர்ந்த ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் நமசிவாயம் டிலக்சன் உள்ளிட்ட நான்கு பேர் தற்காலிக பணியாளர்களாகப் பணிபுரிந்து வந்துள்ளனர்.

நில அளவை பணிக்காக குளத்தில் இறங்கிய போது 25 அகவையுடைய இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் சேற்றில் புதையுண்டு நீரில் மூழ்கிப் பலியாகியுள்ளார்.



கிராம மக்கள் மற்றும் இராணுவத்தினரால் மீட்கப்பட்ட சடலம் தற்போது முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் ஒட்டுசுட்டான் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மக்கள் விசனம் விபரீதமாகும்

**நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் அரசுத் தரப்பிடம் ஒரு கேள்வியை எழுப்பினார். நியாயமான கேள்வி.**

**அரசமைத்து நாட்டை நிர்வகிக்கத் தங்களுக்கு உரித்து இருக்கின்றது என்று இன்னும் துள்ளிக் குதிக்கும் பொதுஜன பெரமுனவினரைப் பார்த்து நாக்கைப் பிடுங்குமாற் போல இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர்.**

**நாட்டில் முன்னெப்போதும் நடந்திராத முறையில் மக்கள் வீதிக்கு வந்திருக்கின்றார்கள். நாட்டின் மோசமான நெருக்கடி நிலைமை மக்களை வீதிக்குக் கொண்டு வந்திருக்கின்றது. மக்கள் வீதிக்கு வந்தமைக்குப் பின்னால் எந்த அரசியல் கட்சியும் இல்லை. மக்களாகவே, தாமாகவே சீறி எழுந்து வீதிக்கு வந்திருக்கின்றார்கள். அதனால் அதிர்ச்சி அடைந்து போயிருக்கின்றீர்கள் என்று ஆளும் தரப்பினரைப் பார்த்துக் கூறினார் சுமந்திரன்.**

**அதற்கு அரசுத் தரப்பாகிய நீங்கள் செய்த பிரதிபலிப்பு என்ன? முழு அமைச்சரவையுமே கூண்டோடு – ஒரு கழுதத்தில் – இராஜினாமாச் செய்திருக்கின்றது. அதன் அர்த்தம் என்ன? நாட்டை நிர்வகிக்க நாங்கள் இயலாதவர்கள் என்பதை நீங்களாகவே ஒப்புக் கொண்டிருக்கின்றீர்கள். அதை ஏற்றுக் கொண்டு விட்டு, இங்கு வந்து இப்போது ஆட்சி அதிகாரம் செலுத்துவதற்கு மக்கள் ஆணை எமக்கு இன்னும் உள்ளது என்றால் அது முட்டாள்தனம் இல்லையா? – என்ற சாரப்பட கேள்வி எழுப்பியிருக்கின்றார் சுமந்திரன்.**

**இந்த ஜனாதிபதியின் முட்டாள்தனமான நடவடிக்கைகளினால்தான் நாடு இப்படி வங்குறோத்து நிலைக்குள் மூழ்கியது என்பதையும் ஆணித்தரமான ஆதாரங்களுடன் அவர் முன்வைத்திருக்கின்றார்.**

**இந்த அவல நிலைக்குள் நாட்டைத் தள்ளியமைக்குப் பொறுப்பேற்று அரசுத் தலைவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தாமாகவே பதவி விலகிச் செல்ல வேண்டும் என்ற நியாயத்தையும் எடுத்துரைத்திருக்கின்றார் சுமந்திரன்.**

**ஆனால் பதவியாசை பிடித்த இந்த அரசுத் தலைவர் அதைச் செய்யப் போவதில்லை. அதன் விளைவு மோசமான – விபரீதமான – நிலைமைகளை நாட்டில் ஏற்படுத்தப் போவது திண்ணம்.**

**நாட்டில் இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி ஆரம்பம் தான். கடும் பஞ்சம், பட்டினி, தட்டுப்பாடு எல்லாம் இனித்தான் வரப்போகின்றன என்ற உண்மையை நாடாளுமன்றத்தின் சபாநாயகரே முன்னெச்சரிக்கையாக நாடாளுமன்றத்தில் அறிவித்து விட்டார்.**

**அதேசமயம், ஜனாதிபதியைப் பதவியை விட்டு இறங்குமாறு கோரி பொதுமக்கள் நடத்தி வரும் போராட்டத்துக்கு ஜனாதிபதி செவிமடுக்க மாட்டார் என்பதை அவர் சார்பில் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நேற்று நாடாளுமன்றத்திலேயே அறிவித்து விட்டார்.**

**இன்னும் மோசமான, பட்டினி, பொருள்கள் பற்றாக்குறை, எரிபொருள் தட்டுப்பாடு, எரிவாயு கியூ, மின்வெட்டு நீடிப்பு என்ற சிக்கல்கள் கழுத்தைப் பிடித்து நெருக்கும் போது மக்களின் போராட்டங்கள் எல்லை கடந்து தீவிரமடையும்.**

**தங்களின் ஜனநாயக ரீதியான எதிர்ப்பை – ஆட்சேபத்தை – நிலைப்பாட்டை – செவிமடுக்க ஆட்சித் தலைவர் இணங்குகின்றார் இல்லை என்ற விசனம் மக்களின் ஜனநாயக கிளர்ச்சிப் போராட்டங்களை புரட்சிக்கான புதிய பாதைகளை நோக்கி நெட்டித் தள்ளும் ஆபத்தும் உண்டு. ஆட்சித் தலைவரின் பிடிவாதம் விபரீதங்களை ஏற்படுத்தும் என்றே தோன்றுகின்றது.**

# இளம் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் முன்மாதிரியாக செயற்படும் பொறுப்பு எனக்குண்டு

### ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு



நாடளாவிய ரீதியில் இளைஞர்கள் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து வரும் நிலையில் இளம் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் சிறந்த முன்மாதிரியாக செயற்பட வேண்டிய பொறுப்பு எனக்கு உண்டு.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் சரியான தருணத்தில், சரியான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகவே நாம் இதுவரை காலமும் அரசாங்கத்துக்கு வழங்கிய ஆதரவை மீளப்பெற்றோம் என்று முன்னாள் இராஜாங்க அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

இதுவரை காலமும் அரசாங்கத்துக்கு வழங்கி வந்த ஆதரவை நீக்கிக் கொள்வதற்காகவும், நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படவிருப்பதாகவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அறிவித்திருப்பதுடன் அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு பதவியில் இருந்து விலகுகிறேன் எனவும் அறிவித்தார்.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாகத் தெளிவுபடுத்தும் நோக்கில் தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கடந்த திங்கட்கிழமை மாலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் பேச்சில் ஈடுபட்டிருந்தோம். அதனை தொடர்ந்து கடந்த செவ்வாய்க்கிழமை அரசாங்கத்துக்கு இதுவரை காலமும் வழங்கி வந்த ஆதரவை நீக்கிக் கொள்வதற்கு தீர்மானித்திருப்பதுடன், நான் இராஜாங்க அமைச்சு பதவியையும் இராஜினாமா செய்துள்ளேன்.

இதனையடுத்து என்னை இழிவுப்படுத்தும் வகையிலான வதந்திகள் பரப்பப்பட்டு வருகின்றமையை அவதானிக்க முடிகிறது. ஆனால் உண்மையில் சரியான விடயத்தை செய்யவேண்டும் என்பதற்காகவே இந்தத் தீர்மானத்தை முன்னெடுத்தோம். அதற்கு மேலாக அண்மைய காலங்களில் நாடளாவிய ரீதியில் இளைஞர்கள் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து வருகிறார்கள். எனவே அவ்வாறு இருக்கையில் இளம் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் நான் ஒரு சிறந்த முன்மாதிரியாக செயற்பட வேண்டியது அவசியமானது.

எனவே கடினமான தருணங்களிலும், நெருக்கடிகளின் போதும் நாம் சரியான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். – என்றார்.

# தமிழ் மக்களை விழிப்புடன் செயற்பட கோருகிறது P 2 P மக்கள் இயக்கம்

சிங்கள தேசத்தின் ஆட்சியாளர்களின் மக்கள் நலன் சாராத ஆட்சி முறைமையால் ஏற்பட்ட பொருளாதார சரிவால், இன்று பாரிய அரசியல் கிளர்ச்சியை சிங்களதேசம் எதிர்நோக்கியுள்ளது.

இது தொடர்பாக அனைத்துத் தமிழ் மக்களும் விழிப்புடன் செயற்படுமாறு பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அது வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

ஆட்சி மாற்றத்துக்காக சிங்கள மக்கள் இன்று வீதியில் இறங்கிப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். 69 லட்சம் சிங்கள வாக்குகளால் வெற்றி பெற்றதாக மார்தட்டிய சிங்கள ஜனாதிபதியை இன்று அதே மக்கள் வீட்டுக்கு போ என வீதியில் இறங்கி கோஷமிடுகின்றார்கள்.

தமிழராகிய நாமும் சிங்கள தேசத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் தேசமும் இந்தப் பொருளாதார நெருக்கடியால் மிகக்கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஆயினும் இந்தப் பொருளாதார நெருக்கடிக்கான மூலகாரணமாக எம்மீது நடத்தப்பட்ட ஆக்கிரமிப்பு இனவழிப்பு யுத்தத்துக்காக உலக நாடுகள் எங்கும் வாங்கிக்குவித்த கடனே ஆகும். இந்தக் கொடிய ஆக்கிரமிப்பு யுத்தத்தின் வடுக்களைத் தாங்கி நிற்கும் நாம் அந்த யுத்தத்தின் கடன் பளுவையும் சுமந்து நிற்கின்றோம்.

தமிழருக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைக் கருத்திற் கொண்டு இந்திய அரசின் அனுசரணையுடன் தொப்புள் கொடி உறவுகளாகிய தாய் தமிழகமும், தமிழக அரசும் முன்னெடுத்துள்ள பொருளாதார உதவித் திட்டத்தை அன்புடன் வரவேற்கின்றோம்.

இந்த உதவிகளை உங்களையும் எம்மையும் பிரிக்கும் கடலை தாண்டி நேரடியாகவே எமது மண்ணில் இந்திய மத்திய அரசின் உதவியுடன் கொண்டுவந்து சேர்ப்பதுடன் தமிழ் மக்களின் கைகளிலேயே நேரடியாகக் கிடைப்பதற்கான வழிமுறைகளை ஏற்படுத்தும்படி உரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வுக்கான அழுத்தத்தை கொடுக்குமாறும் வேண்டுகின்றோம். சிங்கள தேசத்தில் எந்த ஆட்சி மாற்றமும் தமிழ் மக்களுக்கு எவ்விதமான விடிவையும் தரப்போவதில்லை.

எமது பட்டறிவில், ஆட்சிக்கட்டில் ஏறும் எந்த சிங்கள அரசுமே எமது உரிமைகளைப் பறிப்பதிலும், எமது நிலங்களை அபகரிப்பதிலும், எமது வளங்களைச் சுரண்டுவதிலும், தமிழரின் குடிசன பரம்பலை மாற்றியமைப்பதிலும் பின் நிற்கப்போவதில்லை. நாம் பொருளாதார மீட்சிக்காகப் போராடவில்லை, மாறாக எமது பிறப்புரிமைக்காகவே போராடிக் கொண்டிருக்கின்றோம்.

இழந்த எமது இறைமையை மீட்கவே போராடிக்கொண்டிருக்கின்றோம். நாம் 20 வருடங்களுக்கு மேல் மின்சாரமின்றி, எரிபொருள்கள் இன்றி, அடிப்படையான அத்தியாவசியமான மருந்துகள் உட்பட்ட பொருள்கள் கூட இன்றி மிகக்கடுமையான பொருளாதாரத் தடைகள் மத்தியிலும் சுதந்திர மனிதர்களாக, தன்னிறைவான தற்சார்பு பொருளாதாரத்துடன், சிறப்பான தலைமையை கொண்ட நடைமுறை அரசிலேயே வாழ்ந்து வந்தோம்.

இந்தப் பொருளாதார நெருக்கடி எமக்கு ஒன்றும் புதியனவல்ல. ஆயினும் தற்போது ஏற்படுள்ள நிலைமைகளைப் பயன்படுத்தி எமது மக்களையும் இளையவர்களையும் சிலர் தவறாக வழிநடத்தி சிங்கள தேசத்தின் ஆட்சி மாற்றப் போராட்டங்களின் பகடைக் காய்களாகப் பயன்படுத்த விழைகின்றார்கள்.

இது தொடர்பாக அனைத்துத் தமிழ் மக்களும் விழிப்புடன் செயற்படுமாறு வேண்டுகின்றோம். அவர்களை சர்வதேச விசாரணையூடாக கூண்டில் ஏற்றவேண்டும்.

இன்று ஏற்பட்டுள்ள நிலைமைக்கான மூல காரணங்களை ஆராயாது, சிங்கள தேசம் ஆட்சியாளர்களை மாற்றுவதன் மூலம் தீர்க்க விளைகின்றது. அதை விடுத்து, சிங்கள தேசம் தமிழ் மக்களின் நியாயமான உரிமைப் போராட்டத்தை ஏற்றுக்கொள்வதுடன், எம்மீதான இனவழிப்புக்கு சர்வதேச நீதிப் பொறிமுறையினூடாக நீதி பெற வழி சமைப்பதுடன், இறைமையுள்ள வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தேசத்தை அங்கீகரிப்பதனூடாகவே மீட்சி அடைய முடியும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் என்றும் தெரிவித்துள்ளது.

# நடுத்தர வருமானம் பெறுவோர் உரிமைகள் சர்வதேச நாணய நிதியத்தின் கவனத்துக்கு!

## கொண்டுவந்தது மனித உரிமைகள் கண்காணிப்பகம்

பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் இலங்கைக்கு உதவிகளை வழங்கும்போது, குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் மக்களின் மனித உரிமைகள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துமாறு சர்வதேச நாணய நிதியத்துக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

அந்தக் கடிதத் தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது –

தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப்பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதற்கும் எரிபொருள் மற்றும் மின்சார விநியோகத்தில் இடையூறு ஏற்படுவதற்கும் பணவீக்கம் உயர்வடைவதற்கும் வழிவகுத்திருப்பதுடன் பெருமளவான மக்களை நெருக்கடிக்குள் தள்ளியிருக்கின்றது.

பொருத்தமான கடன்வழங்கல் செயற்திட்டம் தொடர்பில் இலங்கையுடன் வெகுவிரைவில் பேச்சுகளை முன்னெடுக்கவிருப்பதாக கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதி சர்வதேச நாணய நிதியம் உறுதிப்படுத்தியிருந்தது. பாரிய பொருளாதார நெருக்கடி அண்மைய வாரங்களில் தலைநகர் கொழும்பு உள்ளடங்கலாக நாட்டின் பல பாகங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் வலுப்பெறுவதற்கு வழிவகுத்திருப்பதுடன், சர்வதேச நாணய நிதியத்தின் உதவி அவசியம் என்பதையும் இது அடிக்கோடிட்டுக் காட்டியிருக்கின்றது. ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சியாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவசரகாலநிலையைப் பிரகடனப்படுத்தியதுடன் 36 மணிநேர ஊரடங்குச்சட்டத்தை அமுல்படுத்தி, சமூகவலைத்தளங்களையும் முடக்கினார். அரசாங்கம் இந்த ஆர்ப்பாட்டங்களைக் கையாளும் போது பாதுகாப்புப்படைகளின் அநாவசியமான பயன்பாட்டைத் தடைசெய்யும் சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கு அமைவாகச் செயற்படவேண்டியது அவசியமாகும்.

இலங்கையில் நடைபெற்றுவரும் ஆர்ப்பாட்டங்கள் பெரும்பாலான மக்களின் பொருளாதார நிலைவரம் தொடர்பில் தெளிவான செய்தியை வழங்குகின்றது. எனவே, இலங்கை அரசாங்கமும் சர்வதேச நாணய நிதியமும் மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் அதேவேளை, தற்போதைய நெருக்கடிகளுக்கான தீர்வை வழங்குவதை முன்னிறுத்திய பொது இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும்.

அதேபோன்று சர்வதேச நாணய நிதியமும் இலங்கை அரசாங்கமும் சமூகப்பாதுகாப்புடன் தொடர்புடைய செயற்திட்டங்களில் அதிக முதலீடுகளைச் செய்வதற்கு முன்னுரிமையளிக்கவேண்டும். அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்ட 2022ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சிற்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டிருந்தமையுடன் (37, 310 கோடி ரூபா), கடந்த ஆண்டு பாதுகாப்பு அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட நிதியைவிட இது அதிகமாகும். ஆனால் கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியிலும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு சுகாதார அமைச்சிற்குக் குறைந்தளவு நிதியே ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மேலும், நிலைபேறானதும் அனைவரையும் உள்ளடக்கியதுமான பொருளாதார வளர்ச்சிக்கு ஊழல் மோசடிகள்தடையாகஅமையும்என்பதைஅங்கீகரித்து, அண்மைய வருடங்களில் ஊழல் ஒழிப்பில் சர்வதேச நாணய நிதியம் வெகுவாக அவதானம் செலுத்திவருகின்றது. அந்தவகையில் இலங்கையில் இடம்பெற்றுவரும் ஊழல்மோசடிகள் குறித்து அவதானம் செலுத்தும் வகையிலான மறுசீரமைப்புக்களை சர்வதேச நாணய நிதியம் மேற்கொள்ளவேண்டும். குறிப்பாக கடந்த 2019 ஆம் ஆண்டில் ராஜபக்ஷ அரசாங்கம் ஆட்சிப் பீடமேறியதன் பின்னர் நிதியியல் ரீதியான வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை முடக்குவதற்கும் மலினப்படுத்துவதற்குமான பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அடுத்ததாக, கடந்த 2020 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட அரசமைப்பிற்கான 20 ஆவது திருத்தம் நீதிமன்றக்கட்டமைப்பின் சுயாதீனத்தன்மையில் பாதிப்பை ஏற்படுத்தியதுடன் தேசிய கணக்காய்வு அலுவலகம் மற்றும் இலஞ்சம், ஊழல்மோசடி விசாரணை ஆணைக்குழு ஆகியவற்றின் சுயாதீனத்தன்மையிலும் தாக்கம் ஏற்பட்டது.

இவ்வாறானதொரு பின்னணியில் கடந்த 2019 ஆம் ஆண்டில் சர்வதேச நாணய நிதியத்தால் உள்வாங்கப்பட்ட சமூகம் சார்ந்த செயற்திட்டத்தின் ஊடாக சமூகப் பாதுகாப்புத் திட்டங்களில் அதிகளவான முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்தவேண்டும். ஏற்கனவே, வறுமை நிலையிலிருப்பவர்களைப் பாதிக்காத வகையிலான வரி அறவீட்டு முறைமையை அறிமுகப்படுத்துவதற்கும் நீதிமன்றம், கணக்காய்வாளர் நாயகம், சட்டமா அதிபர் மற்றும் இலஞ்சம், ஊழல் மோசடி விசாரணை ஆணைக்குழு உள்ளிட்ட அனைத்துக் கட்டமைப்புக்களிலும் அவசியமான மறுசீரமைப்புக்களை ஏற்படுத்துவதற்கும் சர்வதேச நாணய நிதியம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# அரசுக்கு எதிராக இன்று மன்னாரில் போராட்டம்!

## அழைக்கிறது தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம்

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் இன்று (வியாழக்கிழமை) காலை 9 மணிக்கு மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக அரசிற்கு எதிராக இடம்பெறவுள்ள ஜனநாயக போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அரசின் தூர நோக்கற்ற நிதி நிர்வாக முகாமைத்துவத்தால் நாடு பெரும் பொருளாதாரப் பின்னடைவை எதிர்நோக்கி பட்டினிச்சாவை நோக்கி நகர்கின்றது.

குறிப்பாக, அத்தியாவசியப் பொருள்களின் விலை ஏற்றம் மற்றும் மின்சாரம் இன்றி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே இந்தச் செயலைக் கண்டித்து தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் இன்று (வியாழக் கிழமை) காலை 9 மணிக்கு மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக இடம்பெறவுள்ள மாபெரும் கண்டனப் போராட்டத்தில் அனைவரையும் கலந்து கொண்டு தமது உணர்வுகளை வெளிப்படுத்த அணி திரளுமாறு தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன் அழைப்பு விடுத்துள்ளார்.

# அவசரமாக நாட்டை விட்டு தப்பிய மஹிந்தவின் நெருங்கிய உறவினர்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய உறவினரான நிரூபமாக ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

முன்னாள்துணை அமைச்சர் நிரூபமா ராஜபக்ஷ கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 10.25 மணியளவில் இலங்கையை விட்டு வெளியேறியுள்ளார்.

அவர் எமிரேட்ஸ் விமான சேவைக்குச் சொந்தமான ஈ.கியு – 655 விமானத்தில் பயணித்துள்ளார் என விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அவர் டுபாய் நோக்கி பயணித்துள்ளார் என இதுவரையில் தகவல் வெளியாகியுள்ளது.

சட்டவிரோதமாக வெளிநாடுகளில் கோடிக்கணக்கில் சொத்துக்களைக் குவித்துள்ள பிரபலங்களின் பெயர்கள் உள்ளடங்கிய பண்டோரா ஆவணத்தில் நிரூபமா ராஜபக்ஷவின் பெயரும் உள்ளடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரயில் கடலையில் அவதானம் தேவை!

ரயில் கடவைகளை பயன்படுத்தும் போது அவதானமாக இருக்குமாறு ரயில்வேத் திணைக்களம் வாகன சாரதிகளையும் பாதசாரிகளையும் எச்சரித்துள்ளதாக ரயில்வே அத்தியட்சகர் (போக்குவரத்து) ஏ.டி.ஜி செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

குறிப்பாக மின்வெட்டு நேரங்களில் ரயில் கடவைகளை பயன்படுத்தும் போது அவதானம் தேவை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஏனெனில் மின்வெட்டு நேரங்களில் ரயில் கடவைகளில் சமிக்ஞைகள் இயங்காது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின் வெட்டு நேரங்களில் சமிக்ஞைகளுக்கு மின் கலங்கள் பயன்படுத்தப்பட்டாலும் அவை குறிப்பிட்ட நேரத்துக்கு மட்டுமே பயன்படுத்த முடிவதாக சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே மக்கள் ரயில் கடவைகளில் மிகுந்த அவதானத்துடன் பயணங்களை மேற்கொள்ள வேண்டுமெனவும் விபத்துக்கள் ஏற்படக்கூடிய அபாயங்கள் காணப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெளிநாடு செல்ல தயாராகிறார் நாமல்!



இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை, அபிவிருத்தி கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்புத் துறை அமைச்சுக்களில் இருந்து ராஜினாமா செய்த நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகனுமான நாமல் ராஜபக்ஷ வெளிநாடு செல்ல தயாராகி வருகின்றார்.

இது தொடர்பில் கடந்த வெள்ளிக் கிழமை கொழும்பு மேல் நீதிமன்றில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டன.

வெளிப்படுத்த முடியாத வகையில் 3 கோடி ரூபா சம்பாதித்தார் என கறுப்புப் பண சுத்திகரிப்புச் சட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுடன் சேர்த்து 6 பேருக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கு விசாரணையின் போது இது வெளிப்படுத்தப்பட்டது.

முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, கவர்ஸ் கோப்ரேட் நிறுவனம், அந்நிறுவனத்தின் பணிப்பாளர்களான இந்திக பிரபாத் கருணாஜீவ, சுஜானி போகொல்லாகம, இரேஷா சில்வா, நித்தியா செனானி சமரநாயக்க ஆகியோரே இந்த வழக்கின் பிரதிவாதிகளாவர்.

முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, வெளிநாடு செல்வதன் பொருட்டு நீதிமன்றை தெளிவுபடுத்துவதற்காக, குறித்த வழக்கை எதிர்வரும் 28 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்குமாறு, நாமலின் சட்டத்தரணியான, ஜனாதிபதி சட்டத்தரணி காமினி மாரப்பன கொழும்பு மேல் நீதிமன்றில், நீதிபதி நவரத்ன மாரசிங்க முன்னிலையில் கோரிக்கை விடுத்தார். இதனூடாக நாமல் வெளிநாடு செல்ல தயாராகின்றமை வெளிப்படுத்தப்பட்டது.

2013 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதிக்கும் 2014 ஒகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் கொழும்பில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு சொந்தமான கவர்ஸ் கோப்ரேட் சேர்விஸ் நிறுவனம் வேறு ஒரு நிறுவனத்துடன் செய்த கொடுக்கல் வாங்கலின் போது, மோசடியான முறையில் பாரிய அளவில் பணத்தை பயன்படுத்த சதித்திட்டம் தீட்டினார் எனவும் அதன் ஊடாக 3 கோடி ரூபாவை சம்பாதித்தார் எனவும் கறுப்புப் பண சுத்திகரிப்புச் சட்டத்தின் கீழ் 11 குற்றச்சாட்டுக்களின் கீழ் சட்டமா அதிபரால் மேல் நீதிமன்றில் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

அவ்வாறு வெளிப்படுத்த முடியாத வகையில் சம்பாதித்த 3 கோடி ரூபா ஊடாக ஹலோ கோப் எனும் நிறுவனத்தைக் கொள்வனவு செய்துள்ளார் எனவும் சட்ட மா அதிபரால் நாமல் உள்ளிட்ட 6 பிரதிவாதிகளுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த வழக்கு கடந்த செவ்வாய்க் கிழமை விசாரணைக்கு வந்தது. இதன்போதே நாமலின் சட்டத்தரணிகள் ஊடாக மேற்படி கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

அதன்படி குறித்த வழக்கு எதிர்வரும் 28 ஆம் திகதி விசாரணைக்கு வரவுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் தொடர்பில் ஆராய்வு!



கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் தொடர்பில் கொடையாளர்கள் மற்றும் அமெரிக்க தூதரக அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை முகமாலை பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள் தொடர்பில் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டனர்.

கிளிநொச்சி முகமாலை மேற்கு பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டுக்கு அமெரிக்காவிலிருந்து கொடையாளர்களால் நிதியுதவி வழங்கப்பட்டு கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்களால் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் மேற்படி பணியின் முன்னேற்றங்கள் தொடர்பிலும், தொடர்ந்தும் அந்தப் பணியை மேற்கொள்வது தொடர்பிலும் கள ஆய்வை மேற்கொள்வதற்காக இந்தக் குழுவினர் வருகை தந்திருந்தனர்.

மேற்படி குழுவில் கண்ணிவெடி அகற்றும் பணிக்காக நன்கொடைகளை வழங்கும் அமெரிக்கர்களின் பிரதிநிதிகள் மற்றும் இலங்கைக்கான அமெரிக்க தூதரக அதிகாரிகள் ஆகியோரும் கள ஆய்வு மேற்கொண்டனர்.

முகமாலை மேற்குப் பகுதியில் டாஸ் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்ணிவெடியகற்றும் மனிதாபிமான பணியினை பார்வையிட்டனர். இதன்போது குறித்த பகுதியில் மீட்கப்பட்டும் ஆபத்தான வெடிபொருள்கள் தொடர்பிலும், அதனை அகற்றுவதில் ஏற்படுகின்ற சவால்கள் தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டது. மேலும் இதுவரை அகற்றப்பட்ட கண்ணிவெடிகள், பூரணப்படுத்தப்பட்ட பகுதிகள், மேற்கொள்ளப்படவேண்டிய பகுதிகள், தேவைப்பாடுகள் உள்ளிட்ட விளக்கமும் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

தொடர்ந்து கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டில் ஈடுபட்டுவரும் ஊழியர்களையும் அவர்கள் சந்தித்து கலந்துரையாடியமையுடன். கள நிலைமைகளையும் பார்வையிட்டனர். தொடர்ந்து இந்தச் செயற்பாட்டில் ஈடுபட்டுவரும் பணியாளர்களுடன் குழுவினர் படத்தையும் பெற்றுக்கொண்டனர்.

இந்த விஜயத்தின்போது டாஸ் நிறுவனத்தின் உயர் அதிகாரிகளும் பங்கு கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைத்தியர்கள், தாதியர்கள் போராட்டம்

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிலைய வைத்தியர்கள், தாதியர்கள், தாதிய உதவியாளர்கள் இணைந்து போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

மேற்படி போராட்டம் நேற்று (புதன்கிழமை) நண்பகல் 12 மணியளவில் கிளிநொச்சி வைத்தியசாலை வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்டு பிரதான வீதிவரை சென்று அங்கு கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அரசாங்கத்தின் செயற்பாட்டால் ஏற்பட்டுள்ள மருந்து தட்டுப்பாடு மற்றும் சுகாதாரப் பொருள்களின் தட்டுப்பாடுகளால் சுகாதாரத்துறையை முழுமையாக முன்னெடுக்க முடிவில்லை என்பது தொடர்பான பதாதைகளை அவர்கள் ஏந்தியிருந்தமையுடன், கோஷங்களையும் எழுப்பியிருந்தனர்.

இந்தப் போராட்டத்தில் வைத்தியர்கள், தாதியர்கள், தாதிய உதவியாளர்கள் என இன மதம் கடந்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த வைத்தியர் குறிப்பிடுகையில் –

மருந்து மற்றும் சத்திரசிகிச்சைக்குத் தேவையான பொருள்கள் பற்றாக்குறையாக உள்ளன. இருப்பதைக்கொண்டு மக்களுக்குச் சேவையை வழங்கி வருகின்றோம். சிக்கனமாகப் பயன்படுத்துகின்றோம். இந்த நிலை தொடருமானால் வைத்திய சேவையை மக்களுக்கு வழங்க முடியாத நிலை ஏற்படும். இதனால் மக்கள் பெரும் சவால்களுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலை ஏற்படும் எனவும் அவர் இதன் போது தெரிவித்தார்.

# அரசியல் மற்றும் பொருளாதார நிலைமையை கண்காணித்து வரும் சர்வதேச நாணய நிதியம்!

சர்வதேச நாணய நிதியம் இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார நிலைமையை மிக நெருக்கமாக கண்காணித்து வருவதாக சர்வதேச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த மாத இறுதியில் வொஷிங்டனுக்கு புதிதாக நியமிக்கப்பட்ட நிதியமைச்சரின் வருகை உட்பட, கலந்துரையாடல்களை நடத்த சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் எதிர்பார்த்துள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தலைவர் மசாஹிரோ நோசாக்கி வெளியிட்டுள்ள அறிக்கையை மேற்கோளிட்டு வெளிநாட்டு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

புதிதாக நியமிக்கப்பட்ட நிதியமைச்சர் அலி சப்ரி பதவியேற்று 24 மணித்தியாலங்களின் பின்னர் செவ்வாய்க்கிழமை இராஜினாமா செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை திறைசேரி மற்றும் நிதி அமைச்சின் செயலாளராக செயற்பட்டுவந்த எஸ்.ஆர் ஆடிகலவும் தனது இராஜினாமாவை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியை சந்தித்து இலங்கை அரசாங்கம் ஏப்ரல் 11 ஆம் திகதி பேச்சு நடத்த உள்ள நிலையில் இவர்கள் இராஜினாமா செய்துள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சுக்கு செல்லும் அதிகாரிகள் உட்பட தொழில்நுட்பக் குழுவில் எவ்வித மாற்றங்களையும் மேற்கொள்ளும் எண்ணம் அமைச்சுக்கு இல்லை என ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இதேவேளை மத்திய வங்கியின் ஆளுநராக நந்தலால் வீரசிங்க கடமையாற்றுகின்றார் எனத் தெரிவிக்கப்படுகின்ற போதும் மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை.

# எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்பு மட்டக்களப்பில் நீண்ட வரிசை!

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் மக்கள் வாகனங்களுடன் மற்றும் கொள்கலன்களுடன் எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காக நீண்ட வரிசையில் செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணி தொடக்கம் காத்திருந்தனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டையடுத்து மாவட்டத்தில் பல எரிபொருள் நிரப்பு நிலையங்கள் எரிபொருள்கள் இல்லை என்று பதாகையிட்டு, எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குள் வாகனங்கள் உட்செல்லவிடாது கயிறுகட்டி மூடியுள்ளனர்.

இந்த நிலையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன் பொதுமக்கள் அதிகாலை 5 மணி தொடக்கம் நீண்ட வரிசையில் வாகனங்களுக்கு பெற்றோல். டீசல் பெறுவதற்கும் வீடுகளில் விளக்கு மற்றும் அடுப்பு எரிப்பதற்காக பொதுமக்கள் மண்ணெண்ணெயை பெறுவதற்காக கொள்கலன்களுடன் சுட்டெரிக்கும் வெய்யிலில் காத்துக்கிடக்கின்றனர்.

# அரச ஊழியர் தொழிச்சங்கங்களும் போராட்டத்துக்குத் தயாராகின்றன!

## மேலும் நெருக்கடிகளை எதிர்நோக்கவுள்ள அரசு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் இராஜினாமாவை பிரதான கோரிக்கையாக முன்வைத்து அனைத்து அரச ஊழியர்களும் பங்கேற்கும் பாரிய வேலைநிறுத்தம் ஒன்றை முன்னெடுப்பது தொடர்பாக அரச துறையில் உள்ள தொழிற்சங்கங்கள் தற்போது கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று இது தொடர்பில் செய்தி வெளியிட்டுள்ளது.

பதவி விலகலுக்கு மேலதிகமாக, வாழ்க்கைச் செலவைக் குறைத்தல் மற்றும் நடைமுறையில் உள்ள அவசரகாலச் சட்டத்தை திரும்பப் பெறுதல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து மேற்படி வேலைநிறுத்தம் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக முன்னணி பொதுச் சேவை தொழிற்சங்கப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். தற்போதைய நெருக்கடிக்கு அரசியல் அதிகாரிகள் தீர்வுகாணத் தவறியமைக்கு எதிராக, பல கட்டங்களாகப் போராட்டம் நடத்த அரசு ஊழியர்கள் முடிவு செய்துள்ளனர். அதன்படி, மூன்றாம் கட்டமாக நாடளாவிய ரீதியில் வேலைநிறுத்தத்தை முன்னெடுப்பது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருவதாக செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை, நெருக்கடி நிலைமைக்கு அரசாங்கம் விரைவான தீர்வை வழங்குமாறு கோரி அனைத்து அரச ஊழியர்களும் நேற்று (புதன்கிழமை) பிற்பகல் உணவு இடைவேளையின் போது மௌனப் போராட்டத்தை நடத்தவுள்ளதாக இலங்கை அரச உத்தியோகத்தர்களின் தொழிற்சங்க சங்கம் அறிவித்துள்ளது.

மேலும், நாடளாவிய ரீதியில் 2 லட்சத்து 47 ஆயிரம் ஆசிரியர்களும் 16 ஆயிரம் அதிபர்களும் இணைந்து செவ்வாய்க்கிழமை அனைத்து வலயக் கல்வி அலுவலகங்களுக்கு முன்பாக போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர். கடந்த சில மாதங்களாக, நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலவும் பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டுள்ள அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வு மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு ஆகியவற்றைக் கண்டித்து பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டன.

அண்மைக்காலமாக இந்தப் பிரச்சினைகள் தீவிரமடைந்துள்ள நிலையில், ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் பதவி விலகக் கோரி நாடளாவிய ரீதியில் தற்போது போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, 6 லட்சம் அரச உத்தியோகத்தர்களை உறுப்பினர்களாகக் கொண்ட அரச நிறுவனங்களில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வை வழங்காவிடின் எதிர்காலத்தில் கடமைகளில் இருந்து விலக நேரிடும் என அண்மையில் எச்சரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இடைக்கால நிர்வாகம் உருவாகும்போது நாம் நிரந்தரத் தீர்வை நோக்கி நகரலாம்

## எம்.கே.சிவாஜிலிங்கம் சுட்டிக்காட்டு

வடக்கு கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை உருவாக்கும் போதுதான் நாம் நிரந்தர தீர்வை நோக்கி நகர்வதற்கு உதவியாக இருக்கும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகிய மூன்று அணிகளும் இவற்றை சாதகமாக பரிசீலிக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளருமான எம்.கே.சிவாஜி லிங்கம் தெரிவித்தார்.

வல்வட்டிதுறையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதியின் கோரிக்கையின்படி காபந்து அரசாங்கத்தை பிரதான எதிர்க் கட்சிகள் உட்பட பல கட்சிகள் நிராகரித்துள்ளன. இந்தச் சூழலின் பின்னணியில் தான் தமிழ் மக்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்.

ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை நாங்கள் ஓர் உறுதியான இறுக்கமான தீர்மானத்துக்கு வர வேண்டியவர்களாக இருக்கின்றோம். வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்க வேண்டும்.

இடைக்கால நிர்வாகத்தை உருவாக்கும் போதுதான் நாம் நிரந்தர தீர்வை நோக்கி நகர்வதற்கு உதவியாக இருக்கும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகிய மூன்று அணிகளும் இவற்றை சாதகமாகப் பரிசீலிக்க வேண்டும். – என்றார்.



# யாழ்.மாநகர சபையிலும் 'கோ கோத்தா கோம்'

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.07

யாழ்ப்பாணம் மாநகர சபை அமர்விலும் கடந்த செவ்வாய்க் கிழமை 'கோ கோத்தா கோம்' என்னும் வாசகம் தாங்கிய வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் சபையில் பிரசன்னமாகியிருந்தார்.

கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் தற்போதைய இலங்கை அரசின் செயற்பாட்டை கண்டித்து கையில் கறுப்புப் பட்டி அணிந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதேநேரம் கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவர் மஞ்சள், சிவப்பு துணியணிந்தவாறு கறுப்புப் பட்டியுடன்



'கோ கோத்தா கோம்' என எழுதப்பட்ட பட்டியை தலையில் அணிந்தவாறு சபை அமர்வில் பங்குகொண்டிருந்தார்.

# தேர்தல் இல்லாமல் தீர்வு கிடையாது!

## வாசு அறிவிப்பு

தேர்தலுக்குச் செல்லாமல் தற்போதுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகம் ஒன்றிடம் அவர் இது தொடர்பில் விவரித்துள்ளார்.

சுயேச்சைக் குழுவாகச் செயற்பட்டாலும் எதிர்க்கட்சியில் இணையப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# பாடசாலைகள் ஒரு மணி நேரம் 18 ஆம் திகதி முதல் அதிகரிப்பு!

இலங்கையிலுள்ள பாடசாலைகளில் எதிர்வரும் 18ஆம் திகதி முதல் புதிய நடைமுறை செயற்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி எதிர்வரும் 18ஆம் திகதி முதல் ஆரம்பமாகும் புதிய தவணையிலிருந்து பாடசாலை நேரத்தை ஒரு மணித்தியாலம் வரை நீடிப்பதற்கான தீர்மானத்தை கல்வி அமைச்சு எடுத்துள்ளது.

இந்த ஆண்டுடன் (2022) தொடர்புடைய பாடத்திட்டங்களை உள்ளடக்குவதற்கு 139 நாள்கள் வரையறுக்கப்பட்ட கால அவகாசம் காணப்படுவதால், இந்தத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாடசாலை நேரத்தை ஒரு மணித்தியாலம் நீடித்து கற்பித்தலுக்கான காலம் அதிகரிக்கப்படவுள்ளது.

இந்த புதிய திட்டத்தாலும் பாடத் திட்டத்தை முழுமையாக உள்ளடக்க முடியாத நிலை ஏற்படுமாயின் சனிக்கிழமைகளில் பாடசாலைகளை நடத்துவது தொடர்பில் கல்வி அமைச்சு அவதானம் செலுத்தும் சாத்தியம் காணப்படுவதாகத் தெரிய வருகிறது.

# வீதியில் தொங்கவிடப்பட்ட கோட்டாவின் உருவப் பொம்மை

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் மிகவும் தீவிரமடைந்துள்ள நிலையில், ஜனாதிபதியின் உருவப் பொம்மை ஒன்று நடு வீதியில் தொங்கவிடப்பட்ட சம்பவம் பதிவாகியுள்ளது.

இது தொடர்பான படங்கள் தற்போது சமூக ஊடகங்களில் வைரலாகியுள்ளன.

ஜனாதிபதி, பிரதமர், நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் முற்றுகையிடப்பட்டு போராட்டங்கள் முன்னெடுக்கப் படுகின்றமையுடன், ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையும் வலுப்பெற்றுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அத்தியாவசிய உணவுப் பொருள்கள், எரிபொருள், எரிவாயு, மருந்துப் பொருள்களுக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அத்துடன், விலைவாசிகளும் கடுமையாக உயர்ந்துள்ள நிலையில், மக்களின் வாழ்க்கைச் செலவு பல மடங்காக அதிகரித்துள்ளன. இது மக்களை கடும்



நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ள நிலையில், தற்போது அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டங்களில் குதித்துள்ளனர்.

அரசாங்கத்துக்கு எதிரான இந்த போராட்டம் மிகவும் தீவிரமடைந்துள்ள நிலையில், ஜனாதிபதியின் உருவப் பொம்மை ஒன்று நடு வீதியில் தொங்கவிடப்பட்ட சம்பவம் பதிவாகியுள்ளது. இது தொடர்பான படங்கள் சமூக ஊடகங்களில் வைரலாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை நிலைமை மிகவும் மோசம் ஆயுதப் போராட்டமும் வெடிக்கலாம்!

## அமெரிக்க பல்கலைப் பேராசிரியர் எச்சரிக்கை

இலங்கையில் பிரச்சினை உடனடியாகத் தீர்க்கப்படாவிட்டால் சிங்கள மக்களுக்கு இடையில் ஒரு சிவில் யுத்தம் வருவதற்கான ஒரு சாத்தியம் இருக்கும் என அமெரிக்காவின் சாஸ்பரி பல்கலைக்கழகத்தின் அரசியல்துறை பேராசிரியர் கலாநிதி கீதபொன்கலன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகமொன்றின் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி போன்றவர்கள் இதே போன்று சிந்திப்பார்களாக இருந்தால் அவர்கள் மக்களின் போராட்டத்துக்குப் பயந்து அரசியலில் இருந்து விலகப் போவதில்லை. பதவியை விட்டுப் போகப் போவதில்லை.

ஆகவே, அடுத்த கட்ட நகர்வாக அமையக்கூடியது என்னவெனில் இராணுவ முறைமை ஒன்றை நோக்கி இலங்கை நகர்வதற்கான ஒரு சாத்தியம் இருக்குமென நான் நினைக்கின்றேன்.

இந்த நிலையில் இராணுவம் கொண்டு வந்து வீதியில் இறக்கப்படுமாக இருந்தால் இந்த நிலைமையை



கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரலாம், பின்னர் ஆட்சியை நாம் நீடித்து செல்லலாம் என்ற யோசனையில் அரசு செயற்படக்கூடும்.

அப்படி நடக்கின்ற போது இந்த மோதல், அரசுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையிலான மோதல் இன்னும் அதிகமாக தீவிரமடையும் என்று நான் நினைக்கின்றேன். இந்த பிரச்சினை உடனடியாக தீர்க்கப்படாவிட்டால் சிங்கள மக்களுக்கு இடையில் ஒரு சிவில் யுத்தம் வருவதற்கான ஒரு சாத்தியம் இருக்கும்.

எனவே அது தடுக்கப்பட வேண்டும். அரசாங்கத்தை ஆதரிக்கும் மற்றும் அரசாங்கத்தை எதிர்க்கும் இரு தரப்பினருக்கும் இடையில் ஓர் ஆயுத மோதல் ஏற்படலாம் என நான் நினைக்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# ரஞ்சித் சியம்பலாபிட்டியின் ராஜினாமா நிராகரிப்பு

பிரதி சபாநாயகர் பதவியில் இருந்து விலகும் ரஞ்சித் சியம்பலாபிட்டியின் ராஜினாமா முடிவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அங்கீகரிக்க மறுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், நாடாளுமன்ற ஜனநாயகத்தை தொடர்ந்தும் பேணுமாறு அவரிடம் ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதி சபாநாயகர் பதவியை இராஜினாமா செய்கிறேன் என ஜனாதிபதிக்கு கடந்த செவ்வாய்க்கிழமை கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் அதற்கு பதிலளிக்கும் வகையில் ஜனாதிபதி இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

பிரதி சபாநாயகர் பதவி சுயாதீனமான பதவி என்பதால் தற்போதைக்கு நாடாளுமன்ற நடவடிக்கைகளைத்



தொடர்வது அத்தியாவசியமானது எனவும் அதற்கமைய ராஜினாமா கோரிக்கையை நிராகரிக்கிறேன் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் சுயேச்சைக் குழுவாகச் செயற்படுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்ததையடுத்து, பிரதி சபாநாயகர் பதவியிலிருந்து விலக தீர்மானித்தேன் என ரஞ்சித் சியம்பலாபிட்டிய வால் ஜனாதிபதிக்கு அறிவிக்கப் பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக் கல்வி வரலாற்றில் அறிவுக் களஞ்சியம் சந்திரசேகரன்

சி. அருள்நேசன்
கல்வியியல் பட்டதாரி



கல்வி உலகில் பேராசிரியர் சோமசுந்தரம் சந்திரசேகரனின் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

பல்லாயிரக்காணக்கான மாணவர்களுக்கு ஐயந்திரிபற அறிவுபுகட்டி அத்தனை பேரினதும் அன்பையும் மதிப்பையும் பெற்ற பேராசான் இவர். இலங்கையின் கல்விச் சமூகம் இவருக்கென வழங்கிய சிம்மாசனம் இன்று வெறுமையாகிக் கிடக்கின்றது. பெற்ற கல்வியைத் தனது சமூக உயர்வில் அள்ளி இறைத்த எளிமையான மனிதர். தன்னை நாடி வருபவர்களைப் புன்னகையுடன் ஏற்று, சகஜமாகப் பேசும் பக்குவம் கொண்டவர். தனது உரைகளில், எழுத்துக்களில் பன்முக கலாசார வளர்ச்சி பற்றியும் சமூகத்தின் எழுச்சி பற்றியும் தொடர்ச்சியாகப் பேசிய ஆசான் அதனை வழிநடத்த இளைய தலைமுறையினர் முன் வரவேண்டும் எனவும் கூறும் பொது மனிதர் இவர்.

கல்விச்சிந்தனையாளர், எழுத்தாளர், பதிப்பாசிரியர், சமூக பற்றாளர், மொழிப்புலமையாளர், சிறந்த நாவன்மையாளர், பன்னூல் படைப்பாளர், நேர்படப் பேசும் நெறியாளர், சிறந்த மனித பண்பாளர் என்ற பல நடிபங்கினை கொண்ட இவர் கல்விச் சமூகத்தில் தனக்கான இடத்தைக் கொண்டு, கோட்பாடுகளை அறிந்து அவற்றிலிருந்து வெளியே வந்து நடைமுறை உலகோடு பொருந்தி சமூகபுலத்துடன் கல்வியை உணர்த்தி நின்ற பேராசான்.

பல்கலைக்கழக காலத்தில் கற்றல், வாசிப்பு, எழுத்து, இலக்கியம், நாடகம் என பலதுறை ஆர்வலராக விளங்கிய பேராசிரியர், தனக்கான இடத்தைத் தக்க வைத்துக்கொள்ள சிறந்த முயற்சியும் அர்ப்பணிப்பும் கொண்டவராகச் செயற்பட்டுள்ளார். தனது வாழ்நாளில் இந்திய வம்சாவளித் தமிழர்களின் முக்கியத்துவம், பிரச்சினைகள் பற்றிக் கூறும் இலங்கை இந்திய வரலாறு' என்ற முதல் நூலை வெளியிட்டமை முக்கியமானதாகும்.

சிறந்த கல்வியிலாளரான இவர், நாட்டின் கல்விக் கொள்கை, பாடத்திட்டம், மொழிப்பெயர்ப்பு, உயர்கல்வி, பட்டப்படிப்பு, பட்டப்பின்படிப்பு, புத்தாக்கம், சர்வதேச தரத்திலான கல்விப்புலத்தை உள்நாட்டில் ஏற்படுத்தல் போன்ற இன்னும் பல விடயங்களை தன்னை முழுமையான அர்ப்பணித்த ஓர் ஆசானாவார். இவை தொடர்பான ஆய்வு கட்டுரைகள், நூல்கள், பத்திரிகை கட்டுரைகளை தொடர்ச்சியாக எழுதி வந்துள்ளார்.

ஆசிரியர் பணியில் மிகுந்த ஈடுபாடு கொண்ட பேராசிரியர், புதிய நூற்றாண்டுக்கான ஆசிரியர் கல்வி என்ற தனது கட்டுரையில் 'புதிய நூற்றாண்டுக்கான புதிய கல்விச் சூழமைவு, புதிய விஞ்ஞான, தொழில்நுட்ப, சமூக அறிவியல் அறிவையும் உயர்மட்டத் திறன்களை பலவற்றையும் வலியுறுத்துகின்றது. இவற்றோடு நற்பண்பு வளர்ச்சி, கற்பதற்கு கற்றல், வாழ்நாள் முழுவதும் கற்கும் பழக்கங்களை ஏற்படுத்தல் என்பனவும் அடங்கும். இவையாவும் ஆசிரியர் கல்வியிலும் பயிற்சியிலும் பிரதான மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. ஆசிரியர்கள் தாம் பாட நிபுணர்கள் என்ற எண்ணத்தைக் கைவிட்டு, மாணவர்களோடு இணைந்து கற்றுக் கொள்ள வேண்டும்' என்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

கல்வித்துறையில் அவர் பார்வை படாத இடமே இல்லை. வகுப்பறைக் கல்வியிலிருந்து பாடசாலைக் கல்வி, மலையகக்கல்வி, பல்கலைக்கழகக்கல்வி, இளையோருக்கானக் கல்வி, புதிய நூற்றாண்டுக்கான கல்வி, வாழ்க்கைகான கல்வி, வாழ்நாள் நீடித்த கல்வி, நவீன கல்விச் செல்நெறிகள் வரை அவர் விரிவாகவும் விளக்கமாகவும் எழுதி குவித்துள்ளார். தமிழிலும் ஆங்கிலத்திலும் அவர் எழுதியுள்ள முப்பதுக்கும் அதிகமான நூல் படைப்புக்கள், எழக்கூடிய அனைத்து கேள்விக்கும் விடை கிடைக்கும் அறிவு களஞ்சியங்க ளாக உலாவருகின்றன.

குறிப்பாக, பேராசிரியரின் கல்விசார்ந்த படைப்புகளில் கல்வியியல் கட்டுரைகள், இலங்கையின் கல்வி வளர்ச்சி, கல்வியும் மனித மேம்பாடும், கல்வி ஒரு பன்முக நோக்கு, கல்வித் திட்டமிடல், புதிய கல்வித்தடங்கள், முகாமைத்துவக் கொள்கைகள் ஓர் அறிமுகம், கல்வியும் மனித வள வளர்ச்சியும், உயர்கல்வியில் புதிய செல்நெறிகள் என முப்பதுக்கும் அதிகமான கல்விசார்ந்த நூல்கள் மற்றும் பத்துக்கும் மேற்பட்ட மொழி பெயர்ப்பு நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

சமூக வாழ்விலும் சரி, தனிமனித வாழ்விலும் சரி கல்வி உட்புகாத, நுழையாத துறையே கிடையாது. கல்வியியல் அறிவுத் தொகுதியில் ஏற்படும் மாற்றங்கள் நாளும் கணமும் நம் புரிதலுக்குள் எளிதில் அடங்காத விசையில் வேகம் கொண்டு வியாபித்து விரியும் சூழலில் கல்விப் புலத்தில் இந்த மாற்றங்களை எதிர்கொள்ளத் தயராக இருக்கக்கூடிய தலைமுறையினரை உருவாக்க எத்த ணிக்க வேண்டும் என்பதைத் தனது எழுத்திலும் உரை யிலும் தொடர்ச்சி யாக வலியுறுத்தியவராவார்.

கல்விச் சமூகம் எழுச்சி பெற வேண்டும் என்ற சிந்தனையைக் கொண்டிருந்த இவர், பல ஆங்கிலக் கட்டுரைகளை மொழிபெயர்த்து அச்செயநெறியை பின்பற்ற எத்தணிக்க வேண்டும் என்ற பரந்த மனதைக் கொண்டு செயற்பட்டார். கல்வித்துறை சார்ந்த விடயங்களில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்ட பேராசிரியர், மலையக மக்களின் வாழ்வியல் செயற்பாடுகளையும் அவர்களின் வரலாறையும் கூறுவதில் பின்வாங்கவில்லை. ஒரு சமூகம் விருத்தியடைவது கல்விசார்ந்த வளர்ச்சியினாலே என்ற விடயத்தை அடிப்படையாகக் கொண்டு மலையக மக்களின் கல்வி வளர்ச்சிக்குப் பல பணிகளை தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்தார்.

கல்வியுலகில் தனக்கானத் தனியிடத்தைக் கொண்டுள்ள பேராசிரியர் தனது வாழ்நாளைக் கல்விக்காகவே அர்ப்பணித்து, ஒட்டுமொத்த கல்விச்சமூகமும் கல்வியில் உயர்ச்சி பெற பங்குதாரராகச் செயற்பட்டவர் என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். அறிவு களஞ்சியமான பேராசான் விதைத்துச்சென்ற அறிவு விதைகள் விருட்சமாகி சமூகத்தின் வளர்ச்சிக்குப் பயனளிக்கும் என்பது திண்ணம்.

## ஜனாதிபதியை பதவி விலகுமாறு நாடாளுமன்றத்தால் கூறமுடியாது

### சபாநாயகர் திட்டவட்டம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு நாடாளுமன்றத்தால் கோரிக்கை விடுக்க முடியாது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்துள்ளார்.

செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஜனாதிபதி பதவி விலகுகின்றமை, புதிய ஜனாதிபதியை நாடாளுமன்றத்தின் ஊடாக நியமித்தல் அல்லது இடைக்கால அரசாங்கத்தை அமைப்பது தொடர்பான யோசனை முன்வைக்கப்பட்டது.

எவ்வாறாயினும், அதற்கான அரசமைப்பு ஏற்பாடுகள் எனவும் இல்லை என சபாநாயகர் கட்சித் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார்.

இதேவேளை, நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை என்பதால், நாடாளுமன்ற பெரும்பான்மையுடன் தீர்மானத்தை நிறைவேற்றி ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்க முடியும் என கட்சித் தலைவர்கள் சுட்டிக்காட்டினர்.

எவ்வாறாயினும், தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டாலும், 52 நாள் ஆட்சிக்கவிழ்ப்பின் போது உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவை சுட்டிக்காட்டி ஜனாதிபதி தீர்மானத்தை புறக்கணிக்க முடியும் என சபாநாயகர் பதிலளித்தார்.

மேலும் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை ஜனநாயக வழிகளில் தீர்க்க வேண்டும் என்றும் ஜனாதிபதியை தெரிவு செய்த மக்களே அவர் தொடர்பாக முடிவெடுக்க வேண்டும் என்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு கட்சிகள் ஒன்றிணைந்து தீர்வை உருவாக்குமாறு ஜனாதிபதி அழைப்புவிடுத்தபோதும் இடைக்கால அரசாங்கத்துக்காக அரசாங்கத்துடன் கைகோர்க்க



எதிர்க்கட்சிகள் மறுப்பு தெரிவித்து விட்டன.

இதற்கிடையில் ஶ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் பத்து பேர் உட்பட 42 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையில் சுயாதீனமாகச் செயற்படவுள்ளதாக அறிவித்ததை அடுத்து அரசாங்கத்தின் நாடாளுமன்ற பெரும்பான்மை ஆட்டம் கண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழில் தீ வீடொன்றில்!

யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பாசையூர் இரண்டாம் குறுக்குத் தெரு வீதியில் உள்ள வீடு ஒன்றில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தால் வீடு முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில் –

தீ விபத்தின் காரணமாக வீடு ஒன்று முற்றாக எரிந்து சேதமாகியுள்ளமையுடன், வீட்டில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த இரண்டு மோட்டார் சைக்கிள் மற்றும் மின்பிறப்பாக்கி இயந்திரம் என்பன முழுமையாக எரிந்து சாம்பராகியுள்ளன.

இதனையடுத்து தீயணைப்புப் பிரிவினருக்கு வழங்கிய தகவலையடுத்து அந்த இடத்துக்கு வந்த தீயணைப்புப் பிரிவினர் தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர்.





## பொருளாதார பிரச்சினைக்கு மத்தியில் வடக்கில் காணி சுவீகரிப்பு நடவடிக்கை!

காணி உரிமையாளர்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் நேற்று (புதன்கிழமை) எழுவை தீவு பகுதியில் 4 பரப்பு காணி கடற்படையினரின் தேவைக்காக அளவீடு செய்யப்பட ஏற்பாடாகியிருந்தது.

இலங்கை மக்கள் பொருளாதாரத்தில் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்ற நிலையில், வடக்கு, கிழக்கில் காணி சுவீகரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

காலைக்கதிர் Kalaikkathir




- டாக்டர் முரளி வல்லிபுரநாதன் -

# வரலாற்று வாய்ப்பு; தவற விடாதீர்கள்! தமிழ்த் தலைமைகளிடம் வேண்டுகோள்

## பொருளாதாரச் சீரழிவும் மக்கள் புரட்சியும்

குறித்த சில அரசியல்வாதிகள் தாம் பதவி விலகுகின்றமை போன்ற பாவனையை ஏற்படுத்தி மக்களின் எதிர்ப்பலையையும் வெறுப்புணர்வையும் திசை திருப்பப்பார்க்கிறார்கள்.

இன்று கொழும்பில் சீனி கிலோ 360 ரூபாவாகவும், பருப்பு கிலோ 500 ரூபாவாகவும் விற்கப்படும் அதே வேளை பாண் கடைகளில் 120 ரூபாவுக்கு விற்கப்படுகிறது.

புதிதாக பதவிக்கு வரும் எவரும் அதலபாதாளத்தில் உள்ள பொருளாதாரத்தை சடுதியாக சீர் செய்து விலைகளை குறைக்க முடியாது. சர்வதேச நாணய நிதியம் அல்லது பொருளாதார வல்லரசுகள் இலங்கைக்கு உதவ முற்பட்டாலன்றி பஞ்சம், பட்டினி, பேரழிவு ஏற்படுவது தவிர்க்க முடியாததாக தோன்றுகிறது.

நாட்டைக் குட்டிச்சுவராக்கி, இந்த நிலைமை ஏற்பட்டதற்கு பதவியில் இருந்த அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் பொறுப்புக் கூறவேண்டும்.

இவற்றுள் பில்லியன் கணக்கில் மாதந்தோறும் காசை அச்சடித்து பணவீக்கத்தை ஏற்படுத்திய மத்திய வங்கி ஆளுநர், உரிய திட்டம் இன்றி உரத்தையும், பீடை கொல்லி மருந்துகளையும் நிறுத்தி விவசாயிகளின் வயிற்றில் அடித்து நாட்டு மக்களை பட்டினியில் தள்ளிய அரசியல் தலைவர்கள், மேலும் தவறான நிதி முகாமைத்துவத்தில் ஈடுபட்டவர்கள் – உதாரணமாக பாதுகாப்புச் செலவீனங்களுக்கு அதிகரித்த பணத்தை ஒதுக்கி செலவீனங்களை அதிகரிக்க வைத்து நாட்டை படுகுழியில் தள்ளியவர்கள் – நாட்டைக் குட்டிச் சுவராக்கும் 'டீல்'களின் மூலமாக கொமிஷன் பெற்று 7 தலைமுறைக்குமான சொத்துச் சேர்த்து வைத்து இருப்பவர்கள் உட்பட அனைத்துக் குற்றவாளிகளும் சுயாதீன விசாரணை மூலம் தண்டிக்கப்பட்டு, அவர்களுடைய சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டு, அவர்கள் மீண்டும் பதவிக்கு வராத வண்ணம் அகற்றப்பட வேண்டும்.



இதைச் செயல்படுத்துவதற்கு வீதியில் கோஷம் எழுப்புவதும், ஊர்வலம் போவதும் மட்டும் போதாது. தொடர்ச்சியாக மாறி மாறி பதவிக்கு வந்த அரசியல்வாதிகளின் பின்னணியை நோக்குவோமாயின், ஆரம்பத்தில் அரசியலில் புகும் பொழுது மத்தியதர அல்லது பொருளாதாரத்தில் அடிமட்டத்தில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். ஆனால் சிறிது காலம் அமைச்சராக அல்லது உயர் பதவிகளை வகித்ததும் இவர்களுக்கு நாட்டிலும் வெளிநாட்டிலும் பல சொத்துகள், வீடுகள், வாகனங்கள், வங்கியில் பெருந்தொகைப் பணம் வந்து சேர்ந்துவிடுகிறது. இவை எல்லாம் எங்கிருந்து வந்தன என்பதைத் தேர்தலில் தோற்றால் சிறிது காலம் விசாரிப்பார்கள். பிறகு மீண்டும் இனவாத பிரசாரத்தின் மூலம் பதவிக்கு வந்ததும் அரசாங்க சட்டமா அதிபர் அலுவலகம் அவர்களுக்கு எதிரான அனைத்து வழக்குகளையும் வாபஸ் வாங்கிவிடும்.

நாடு சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து இந்த ஊழல், மோசடியே தொடர்ச்சியாக இடம் பெற்று வருகிறது. நாடு தொடர்ச்சியாக வெளிநாட்டுக் கடன் சுமையில் அமிழ்ந்து கொண்டுபோகும் நிலையில் பதவியில் இருந்த, இருக்கும் அரசியல்வாதிகள் தொடர்ச்சியாக பெரும் செல்வந்தர்களாக மாறிக் கொண்டிருக்கிறார்கள்.



எனவே தற்போது பதவியில் உள்ள அமைச்சர்களை மாற்றுவதோ அல்லது இதே அரசமைப்பின் கீழ் புதிய நபர்களைத் தெரிவு செய்வதோ நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு உரிய தீர்வை வழங்காது என்பதை போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

நாடு பொருளாதாரத்தில் வளர்ச்சி அடைய வேண்டுமாயின் பொருளாதார நிபுணர்களின் ஆலோசனை சர்வதேச நாணய நிதியத்தின் உதவி மட்டுமல்லாது அரசமைப்பிலும் பாரிய மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்.

இலங்கையில் இப்போது ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதாரப் பின்னடைவு பிரான்ஸியப் புரட்சி ஏற்பட்டபோது பிரான்ஸ் சந்தித்த பொருளாதார பின்னடைவுக்கு அல்லது ரஷ்ய புரட்சி ஏற்பட்ட போது ரஷ்யா சந்தித்த பொருளாதாரப் பின்னடைவுக்கு சமனாக இருக்கிறதென்பதை வரலாற்றுப் பக்கங்களைப் புரட்டுவதன் மூலமாக அறிந்து கொள்ள முடியும்.




முழுமையான மக்கள் புரட்சி ஏற்பட்டு ஆளும் வர்க்கத்திலும் அரசமைப்பிலும் பாரிய மாற்றம் ஏற்படக் கூடிய ஏது நிலைகள் தோன்றி இருக்கின்றன. சிறுபான்மை இனத்தவரின் தலைவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தை உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டால் அதிகாரப் பரவலாக்கத்தையும் இனங்களுக்கு இடையிலான சமத்துவத்தையும் ஏற்படுத்திக் கொள்ள முடியும். இலங்கை சுதந்திரம் அடைந்த போது ஏற்பட்ட சந்தர்ப்பத்தைத் தமிழ்த் தலைவர்கள் உரிய முறையில் பயன்படுத்தாமையின் காரணமாக கடந்த 80 வருடங்களாக தமிழினம் கொடுமைக்கு உள்ளாகி துன்பத்தை அனுபவித்தது.

அதேதவறை மீண்டும் இழைக்காதிருக்க தமிழ் தலைவர்கள் இந்தியாவின் கைக்கூலிகளாக செயல்படுவதை நிறுத்தி ஒற்றுமைப்பட வேண்டியதும் ஒரே குரலில் உரிமைகளை கோருவதும் மிகவும் அவசியம்.

The world will not be destroyed by those who do evil, but by those who watch them without doing anything - Albert Einstein.

காலைக்கதிர்
Kalaikkathir

## போருக்குக் கொட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமை தொடர்பாக நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

நீங்கள் இந்த நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு சென்றீர்கள். ஏன் இந்த நிலைமை ஏற்பட்டது? எப்படி ஏற்பட்டது? நீண்ட ஒரு காலகட்டத்தில் இது நிகழ்ந்துள்ளது.

ஒரு யுத்தத்தைப் புரிவதற்காக நீங்கள் கண் மூடிக்கொண்டு கடன் வாங்கித் தள்ளினீர்கள். நீங்கள் ஏன் யுத்தம் புரிய வேண்டிய தேவை வந்தது? நீங்கள் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாத காரணத்தினால் போர் புரிய வேண்டிய கட்டாயம் உங்களுக்கு ஏற்பட்டது. பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம் அல்லது டட்லி சேனநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருந்தால் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தூக்கி இருக்க மாட்டார்கள். நீங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றாத காரணத்தினால் யுத்தம் புரிய வேண்டிய தேவை ஏற்பட்டது. அதனால் பெரும் தொகைக் கடன்களை வாங்கினீர்கள். இப்போது அவற்றைத் திருப்பிச் செலுத்த வேண்டிய நெருக்கடி கழுத்துக்கு வந்துள்ளது.

மீளமுடியாத அதலபாதாளத்தில் நீங்கள் அடி சறுக்கி விழுவதற்கான அந்த கடைசி அழுத்தியை - தூண்டலை - 2019 டிசம்பரில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே மேற்கொண்டார். கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியானதும் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அதைக் காட்டி, விரைவில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி, அதிலும் வெற்றி பெற்று, முழு அதிகாரத்தையும் கைப்பற்றுவதற்காக குறுக்கு வழிகளை நாடினார். அதற்காக பல வரி விலக்குச் சலுகைகளை - தீர்வை வெட்டுக் குறைப்புகளை - கண்மூடித்தனமாக அறிவித்தார். வற்வரி வீதத்தை பெருமளவு குறைத்தார். வருமான வரி செலுத்தவேண்டிய கட்டுப்பாட்டு எல்லையைக் கண்மூடித்தனமாக உயர்த்தினார். இதுபோன்ற பல நடவடிக்கைகளை எடுத்தார். இப்போதைய ஆய்வு மதிப்பீடுகளின்படி அப்போது அவர் எடுத்த ஒரு நடவடிக்கையால் மட்டும் 25 வீதமான வரி இழப்பு நாட்டுக்கு ஏற்பட்டது. அதைவிட மோசம் என்னவென்றால் வரி செலுத்துவோரில் முப்பத்தி மூன்று வீதமானோர் அந்த பட்டியலில் இருந்து விடுவிக்கப்பட்டனர். அதனால் நாட்டினுடைய மீள் செலுத்துகை வலிமை முழுமையாக முடங்கியது. இலங்கையின் பொருண்மிய நிலை பற்றிய சர்வதேச மதிப்பீடுகள் ஒரேயடியாகத் தாழ்ந்து போயின.

2020 ஏப்ரலில் நாங்கள் நிதிச் சந்தையில் இருந்து புறந்தள்ளப்பட்டோம் - வெளியேற்றப்பட்டோம் - என்பது இப்போது பொது நிதிக் கணக்கு ஆணையத்தின் மூலம் அம்பலமாகியிருக்கிறது. இரண்டு வருடங்களுக்கு முன்னரே நாங்கள் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டு விட்டோம். நீங்கள் அதை மக்களுக்குக் கூறவே இல்லை. சொல்லவே இல்லை. மறைத்து விட்டீர்கள். உங்களின் தவறான நிர்வாகத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டது. ஆனால் மக்களுக்கு அவற்றை நீங்கள் மறைத்து விட்டீர்கள்.

இலகுவாகத் தேர்தலில் வெல்வதற்காக நீங்கள் மக்களுக்கு வழங்கிய சகாயங்கள் கடைசியில் சர்வதேச சந்தையில் இருந்து எங்களை எட்டி உதைத்து வெளியே தள்ளி விட்டன. அந்த வீழ்ச்சியிலிருந்து எங்களால் மீளெழுந்து முன்னேற முடியாமல் இருக்கின்றது. அதனால்தான் நாடு இன்று இந்த நிலையில் வீழ்ந்து கிடக்கிறது.

மக்கள் இப்போது விழித்துவிட்டார்கள். அதனால்தான் 'கோட்டா வீட்டுக்குப் போ' என்று அவர்கள் ஒரே குரலில் உரத்துக் கூறுகிறார்கள். இந்த வீழ்ச்சியை ஏற்படுத்தியது ஜனாதிபதியின் நடவடிக்கைதான். அதனால்தான் அவரை வீட்டுக்குப் போகும்படி மக்கள் ஒரேயடியாகக் கோருகிறார்கள். அவர் வீட்டுக்கு போகவேண்டும். இது ஒரு ஜனநாயக நாடு என்றால் - இங்கே இருக்கின்ற அரச தரப்பினருக்குக் காது கேட்கும் என்றால் - மக்களின் இந்தக் கருத்தைச் செவிமடுத்து, உங்கள் ஜனாதிபதியைப் போகும்படி சொல்லுங்கள். ஒரு ஜனாதிபதி ராஜினாமாச் செய்தால் என்னை ஏற்பாடு என்பது அரசமைப்பில் உள்ளது. அதன்பின் நாடு எப்படி ஆளப்படும் என்பதும் அதில் உள்ளது. அது எல்லாம் ஒழுங்காக நடக்கும். அவர் போகும் வரை மக்கள் அடங்கமாட்டார்கள். அதை என்னால் கூற முடியும்.

இந்தப் போராட்டங்கள் எவையும் எந்தக் கட்சியினாலும் ஒழுங்குபடுத்தப்பட்டவையல்ல. மக்கள் தாங்களாகவே - இயல்பாகவே - இவற்றை முன்னெடுக்கிறார்கள்.

ஜனநாயக அரசியலுக்குத் திரும்பிய ஜே.வி.பி. போன்ற இடதுசாரிகள் மீது, 1983 கலவரத்தை அடுத்து அதற்கான குற்றச்சாட்டை அபாண்டமாகச் சுமத்தி, அவற்றைத் தடை செய்ததன் மூலம் அவற்றை தலைமறைவு இயக்கங்களாக செயற்படத் தூண்டினார் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா. அவரின் அந்தத் தவறை இந்த அரசு செய்யக்கூடாது என்பதை நான் முன்கூட்டியே கூறிவைக்க விரும்புகிறேன். இன்று காலை இங்கு பேசிய அரச தரப்பின் பிரதம கொறடா இந்தக் குற்றச்சாட்டை ஜே.வி.பி. மீது சுமத்தும் விதத்தில் நடந்து கொண்டமை ஜே.ஆர். செய்தமை போன்ற வேலைதான். தயவு செய்து அந்த தவறை மீள நீங்களும் செய்யாதீர்கள். - என்றார் சுமந்திரன்.

---

## ஜனாதிபதி ஆட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உரையாற்றினார். அதிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் ஆற்றிய உரையின் சாராம்சம் வருமாறு:-

இன்று சிறிலங்கா அரசு எதிர் கொண்டுள்ள நெருக்கடி குறித்து விவாதிப்பதற்காக இங்கு கூடியிருக்கின்றோம். இன்றிருக்கிற நெருக்கடியானது, ஆட்சி செய்யும் அரசாங்கத்தின் (Government) மீதுள்ள நெருக்கடிபோன்று தோன்றினாலும், உண்மையில் ஸ்ரீலங்கா அரசே (State) நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது.

ஏனெனில், எதிர்வரும் நாள்களில் இந்த அரசாங்கம் எதிர்கொள்ளும் நிர்ப்பந்தங்களால், பதவியிலிருந்து விலகுவதாக முடிவெடுத்தாலும் கூட, புதிதாக ஆட்சிக்கு வருபவர்கள், அவர்கள் எந்தக் கட்சியினராக இருந்தாலும், துண்டம் துண்டமாக சிதைந்து போயிருக்கும் இந்த சிறிலங்கா அரசின் சிதிலங்களை பொறுக்குவதிலிருந்தே ஆரம்பிக்க வேண்டிய நிர்ப்பந்தமிருக்கும். ஆகவே தான், இது வெறுமனே அரசாங்கத்தின் நெருக்கடி என விவரிக்காது, இதனை சிறிலங்கா அரசகட்டமைப்பின் நெருக்கடி என்று விவரிக்கின்றேன்.

இன்று நாடாளுமன்றத்துக்கு வெளியில், சாதாரண கிராமங்களிலும், பெரும் நகரங்களிலும், பெரும்பாலும் தெற்கிலும், ஏன் வடக்கு, கிழக்கிலும் கூட மக்கள் தங்கள் எதிர்ப்பைவெளிப்படுத்தி வருகிறார்கள்.

ஆட்சி செய்யும் இந்த அரசாங்கம் அதன் கடமையினை ஆற்ற முடியாது தோல்வியடைந்திருப்பதனாலேயே இந்த நிலைமை உருவாகியிருக்கிறது. ஆட்சி செய்வதற்கான திறமையில்லாதமையாலேயே இந்த அரசாங்கம் தோல்வியடைந்திருக்கிறது.

அரசாங்கம் தவறுகளைச் செய்கிறபோது, அதுவும் அத்தவறுகள் வெளிப்படையாகத் தெரிகிறபோது, என்னவிதமான மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்பதனை எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டியிருந்தன. ஆனால் இந்த அரசாங்கம் அவற்றைக் கவனத்தில் எடுப்பதேயில்லை எனவும் முடிவெடுத்திருந்தது.

இச்சபையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டிருப்பதனாலும், ஜனாதிபதி 1.3 மில்லியன் வாக்குகள் அதிகமாகப் பெற்று வெற்றி பெற்றமையினாலும் தாங்கள் எதனையும் செய்யலாம், அவற்றைச் செய்துவிட்டுத் தப்பிவிடலாம் என அவர்கள் எண்ணினார்கள். இந்த வாக்கு பலத்தை வைத்து எதனையும் செய்யமுடியும் என அவர்கள் எண்ணியதால், சிறிலங்கா அரச கட்டமைப்பானது வரலாற்றில் எப்போதும் இல்லாதவகையில் நெருக்கடிக்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

அரசாங்கம் தோல்வியடைந்து விட்டது. இத்தோல்வியை மக்கள் பட்டவர்த்தனமாக விளங்கிக் கொண்டுள்ளார்கள். ஆதலால்தான் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு பெருமளவு வாக்குகளை வழங்கி, வெற்றிபெறச் செய்த மக்களே, இந்த நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை பெற்றுக் கொடுத்த அவர்களே, இன்று வேறு வழிவகை தெரியாமல் ஆர்ப்பாட்டத்தில் இறங்கியுள்ளார்கள். அதன் மூலம் இந்த அரசாங்கத்திற்கு வழங்கிய ஆணையை மீளப்பெற்றுள்ளார்கள். அதனை இந்த அரசாங்கம் விளங்கிக் கொள்ள வேண்டும் எனவும் எதிர்பார்க்கிறார்கள்.

ஜனநாயக முறையில், ஒவ்வொரு நான்கு அல்லது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் அரசாங்கத்திற்கு ஆணை வழங்குகிறார்கள். இலங்கையில் இது ஐந்து வருடங்கள். குறித்த காலத்திற்கு முன்னர் தாம் வழங்கிய ஆணையை மீளப்பெறுவதாக அறிவிக்குமுகமாக, தெருவுக்கு இறங்கிப் போராடுவதுதான் அவர்களுக்கிருக்கின்ற ஒரே வழிமுறை.

ஆகவே பொறுப்புக்கூறல் எந்த வடிவத்திலாவது நிலைநாட்டப்பட வேண்டுமாயின், ஜனாதிபதி பதவி விலகவேண்டும். அதனைத் தொடர்ந்து இந்த அரசாங்கம் பதவி விலகவேண்டும். இவை கேள்விக்கிடமில்லாதவை. மக்களின் போராட்டங்களைத் தணித்து, எதிர்காலத்தில் இவ்வாறு போராட்டங்கள் நடைபெறுவதைத் தவிர்க்கவேண்டுமாயின், இந்த அரசாங்கம் இச்செய்தியை உடனடியாக விளங்கிக் கொள்ளவேண்டும்

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டியது மிகவும் அவசியமானது. அதுபோன்று இந்த அரசாங்கமும் விலக வேண்டியதும் அவசியமானது. ஆனால் ஒரு இடைவெளியிருக்கிறது. துரதிர்ஷ்டவசமாக நாங்கள் இதில் போதாமையை உணர்கிறோம். இப்போதுள்ள நெருக்கடிக்கு அரசியலமைப்பு என்று நாங்கள் அறிகிற விதிகளில் தீர்வு எதுவுமில்லை. இந்த அவையில் இருக்கும் விடயங்கள், அவைக்கு வெளியிலுள்ள நிலைவரத்தைப் பிரதிபலிக்கவில்லை. இந்த அவையில் உள்ள விடயங்கள் வெளியிலுள்ளவை பிரதிபலிக்கவில்லை. ஏனெனில் இரண்டு வருடகாலத்திற்கு முன்னர் அமைக்கப்பட்ட இந்த அவை (அரசாங்கம்) காலத்திற்கு பிந்தியதாக மாறிவிட்டது. இந்த அவையிலுள்ளவர்களுக்கு வாக்களித்த மக்கள் தாம் வழங்கிய ஆணையை மீளப்பெற்றுள்ளார்கள்.

ஜனாதிபதி பதவி விலகுவாரேயாயின், இந்தப் நாடாளுமன்றத்திலிருந்து ஒருவரை ஜனாதிபதியாக நியமிக்கவேண்டும். ஆனால் நான் ஏற்கனவே கூறியது போன்று, இந்த அவை காலவதியாகிவிட்டது. நாளைக்குத் தேர்தல் நடைபெறுமாயின், இன்றைக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மையைக் கொண்ட இந்த அரசாங்கம் வெற்றிபெறுமெனக் கனவு கூடக் காணமுடியாது. ஆகவே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினால் அவருக்குப் பதிலாக இந்த அவையிலிருந்து ஒருவரை ஜனாதிபதியாக நியமிக்கவேண்டும் என யாரும் எதிர்பார்க்க முடியாது.

ஆகவே சில இடைக்கால நகர்வுகளைச் செய்ய வேண்டும். முதலில், இன்றைக்கு ஆட்சி செய்ய முடியாத நிலைக்கு இட்டுச் சென்றுள்ள, மக்களால் சுட்டிக் காட்டப்படும் உடனடிப் பிரச்சினைகளுக்கு ஏதாவது வகையில் பரிகாரம் காண வேண்டும்.

ஜனாதிபதி தான் உடனடியாகப் பதவி விலகுவார் என்பதனை உத்தரவாதப் படுத்தும் வகையில் ஜனாதிபதி அறிவிப்பினை மேற்காள்ளவேண்டும்.

இரண்டாவதாக, இந்த அரசாங்கமும் பதவி விலகுவதாக உறுதியளிக்க வேண்டும்.

மூன்றாவதாக, அடுத்த மூன்று மாதத்திற்குள் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கான திகதி ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

இம்மூன்று உத்தரவாதங்களும் வழங்கப்படுமாயின், அடுத்த மூன்று மாதங்களில் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளவது என்பதனை நாங்கள் அமர்ந்திருந்து சிந்திக்கலாம்.

உண்மை என்னவென்றால், இப்போதுள்ள சூழ்நிலையில் அரசாங்கத்தை அமைப்பதற்கு எதிர்க்கட்சிகள் கூட விரும்பவில்லை. அரசாங்கத்தை அமைப்பதற்குத் தேவையான எண்ணிக்கையான உறுப்பினர்கள் அவர்களிடமிருப்பதாக அவர்கள் உணரவில்லை. அதுபோன்று உங்களிடமிருந்து நாற்பது வரையிலான உறுப்பினர்கள் விலகியிருக்கிறார்கள். நேற்றைய தினம் அவர்கள் எழுந்து நின்று தாங்கள் சுயாதீனமாக இயங்கப்போகிறார்கள் என அறிவித்திருந்தனர். ஆனால் அவர்கள் கடந்த காலங்களில் எல்லாவிடயங்களிலும் ஜனாதிபதியையும், இந்த அரசாங்கத்தையும் கண்ணை மூடிக் கொண்டு ஆதரித்தவர்கள். இன்றைக்கு மக்கள் வீதிக்கிறங்கிப் போராடுகிற நிலையில், தங்களை சுயாதீனமானவர்களாகக் காட்டுவதற்கு அவர்கள் முனைகிறார்கள். இதனைக் கணக்கில் எடுக்கவேண்டியதில்லை. ஆகவே எதிர்கட்சியிலிருக்கும் சரியாகச் சிந்திக்கக் கூடிய யாரும் இவர்களுடன் இணைந்து அரசாங்கத்தை அமைக்க முடியும் என நம்ப மாட்டார்கள்.

இறுதியாக, இன்றைக்கு எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டிருக்கும் சிங்கள பொதுமக்களிடம் இந்த வேண்டுகோளை விடுக்கிறேன். இந்த நாட்டின் வரலாற்றில் முதற்தடவையாக, பொருண்மிய பிரச்சினைகளுக்காக மட்டுமன்றி, இந்த அரசாங்கமும், அரச கட்டமைப்பும் எவ்வாறு நடந்துகொள்கின்றன என்பவற்றுக்கு எதிராகவும் போராடுகிறார்கள்.

முதற்தடவையாக, இராணுவபலமும், இந்த அரசகட்டமைப்பின் பெரும்பலமும் அவர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன. இது எவ்வளவு ஆபத்தானது என்பதனையும், அவர்கள் குரலற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள் என்பதனையும் அவர்கள் உணர்ந்துள்ளார்கள்.

ஆட்சிக் கட்டமைப்பில் உள்ள அரசியல்வாதிகள் தங்களைப் பற்றியே சிந்திக்கிறார்கள், இவ்வரசியல்வாதிகள் உண்மைக்குப்புறம்பான விடயங்களைத் தெரிவித்து வருகிறார்கள். இது கடந்த ஒரு சில வருடங்களாக அல்ல. பல தசாப்தங்களாக நடைபெறுகிறது. எனவே, மக்கள் தாம் ஏமாற்றப்பட்டுள்ளார்கள் என்பதனை உணர்ந்துகொள்வார்கள்.

வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் வழங்கியஆணைக்குமாறாக 74 வருடங்களாக தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளார்கள், அவர்கள் மட்டுமல்ல சிங்கள மக்களும் நாட்டின் சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன என்பதனை உணர்ந்தே அவர்கள் வீதிக்கு வந்திருக்கிறார்கள்.

இது இந்த நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான பொன்னான சந்தர்ப்பம். இலங்கை நாடானது இந்தத்தீவிலுள்ள எல்லா மக்கள் குழுமைங்களையும் பிரதிநித்துப்படுத்துவதான ஒரு புதிய ஆரம்பத்திற்கான நல்ல சந்தர்ப்பமிது. சிங்களம் பேசும் தேசமாக, தமிழ்பேசும் தேசமாக இலங்கையில் மாறுபட்ட அடையாளங்களைக் கொண்டாடுவதற்கான நல்ல சந்தர்ப்பம். இந்த உண்மை நிலைமையை கவனத்திலெடுக்கத் தவறக் கூடாது. வரலாற்றில் முதற்தடவையாக இத்தகைய மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு தமிழ் மக்கள் ஆதரவளிக்கத் தயாராக விருக்கிறார்கள். அதற்காக நீங்கள் எங்களுக்கு ஆதரவளிக்க வேண்டும்.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை அகற்றுவதற்கு மட்டுமல்ல, கூட்டாட்சி முறையில் தமிழ்த் தேசம், சிங்களத் தேசமும் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி முறைமையை ஏற்படுத்துவதற்கு நீங்கள் இணங்கவேண்டும். ஒற்றையாட்சி முறைமை என்பது காலத்திற்குப் பிந்தியது. நீங்கள் அதனை 74 ஆண்டுகளாக வைத்திருக்கிறீர்கள். விடுதலைப் புலிகளை நீங்கள் அழித்தற்கு பின்னரும், கடந்த பன்னிரண்டு வருடங்களாக,

12


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# பொருளாதார நெருக்கடி உக்கிரமடையும்; உணவுப் பஞ்சம் ஏற்படும்; இருண்ட யுகம் ஏற்படாமல் இவ்வாரத்துக்குள் தீர்வைக் காணுங்கள்!

## அனைத்து எம்.பிக்களுக்கும் சபாநாயகர் அழைப்பு



நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மேலும் உக்கிரமடையக் கூடும் என பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அதே போல உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே, நாட்டில்தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையில் இருந்து மீள் தற்கு ஜனநாயக வழியில், அரசமைப்பு ரீதியாக பொதுவான தொரு வேலைத்திட்டத்தை இவ்வாரத்துக்குள் உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுங்கள் – அதனை செயற்படுத் துங்கள்.

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம்அவசரகோரிக்கையொன்றை முன்வைத்துள்ளார் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் சபாநாயகர்மஹிந்தயாப்பாஅபேவர்தன தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு வேளையின்போதே, மக்களின்சார்பில்தான் இந்தக்கோரிக்கையை விடுக்கிறார் என சபாநாயகர் குறிப்பிட்டார்.

கடும் பொருளாதார நெருக்கடியின் ஆரம்ப கட்டத்தில் நாடு உள்ளது. இந்நிலைமை மேலும் உக்கிரமடையக்கூடும் எனப் பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அதனாலேயே 'ஆரம்பக் கட்டம்' என நான் குறிப்பிடுகின்றேன்.

"இன்று நிலவும் எரிபொருள், சமையல் எரிவாயு, மின்சாரம் ஆகியவற்றுக்கான தட்டுப்பாட்டை விடவும், கடும் உணவு தட்டுப்பாடு ஏற்படும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. இந்நிலைமையை அப்படியே விடுவதா அல்லது ஓரளவேனும் கட்டுப்படுத்திக்கொள்வதா என்பது இனிவரும் நாள்களில் நாம் எடுக்கவுள்ள நடவடிக்கைகளிலேயே தங்கியுள்ளது. – என்றும் சபாநாயகர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, நாடாளுமன்ற வளாகத்தை போராட்டக்காரர்கள் சுற்றிவளைத்ததால் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்பட்ட நெருக்கடி நிலை பற்றியும் சபாநாயகர் விவரித்தார்.

நாடாளுமன்ற ஜனநாயகத்தை நம்புபவர் என்ற அடிப்படையில் இத்தகைய சம்பவங்களைத் தான் கண்டிக்கிறார் எனவும், இது சம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபர் உட்பட பாதுகாப்பு தரப்பினருக்குத் தான் அறிவித்துள்ளார் எனவும் சபாநாயகர் குறிப்பிட்டார். மக்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை, அழுத்தங்களால்தான் இந்நிலைமை ஏற்பட்டுள்ளது என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும் என்றார் அவர்.

யாரால் இந்நிலைமை ஏற்பட்டது, தவறு எங்குள்ள என்பது பற்றி விவாதித்துப் பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொள்ளாமல், தற்போது என்ன செய்ய வேண்டும், அதனை எப்படிச் செய்ய வேண்டும் என்பது தொடர்பில் விவாதித்து, ஒன்றுமையாகத் தீர்வை எட்டுங்கள். கூட்டு நடவடிக்கை வெற்றியளிக்கும் என்ற பாடத்தை வரலாறு எமக்கு உணர்த்தியுள்ளது – என அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் சபாநாயகர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றம் தற்போது எதிர்கொண்டுள்ள இந்நிலைமையை ஜனநாயக வழியில் தீர்க்கலாம் என நாம் நம்புகின்றேன். அவ்வாறு முடியாமல் போனால் அதன்மூலம் நாடாளுமன்ற ஜனநாயகம் தோற்கடிக்கப்படும். மீண்டும் இருண்ட யுகம் உருவாகக்கூடும். எனவே, தோல்வி அடையாமல் இருப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். – என சபாநாயகர் கோரிக்கை விடுத்தார்.

அரசியல் பேதங்களை , அரசியல் நோக்கங்களை ஒதுக்கிவைத்துவிட்டு, நெருக்கடி நிலைமையில் இருந்து மீள்வதற்கான பொது வேலைத்திட்டத்தை அரசமைப்பின் பிரகாரம் ஜனநாயக வழியில் எடுங்கள். அதனை உடன்செயற்படுத்துங்கள். இவ்வாரத்துக்குள் அதனை செய்து முடியுங்கள். இதன்மூலம் நாடாளுமன்றத்தின் உயரிய தன்மையும், மக்களும் பாதுகாக்கப்படுவார்கள். – என்றும் சபாநாயகர் கோரிக்கை விடுத்தார்.

# நாடாளுமன்றத்துக்குள்ளும் உருவெடுத்தது ஆர்ப்பாட்டம்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு வலியுறுத்தி ஐக்கிய மக்கள் சக்தியினர் நாடாளுமன்றத்திற்குள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

அரசாங்கத்தின் பிரதம கொறடாவாக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டாரவுக்கும் இடையில் ஏற்பட்ட கடும் வாக்குவாதத்தை தொடர்ந்து நாடாளுமன்றம் நேற்று காலை 10 நிமிடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார உரையாற்றும்போது அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தொடர்ந்து குறுக்கிட்டமையினால் வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்நிலையில் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது பதவியை ராஜினாமாச் செய்யவே மாட்டார் என ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ சபைக்கு அறிவித்தார்.

அவரது பதில் ஆளும் கட்சிக்கும் எதிர்க் கட்சிக்கும் இடையே வாக்கு வாதத்தை விளைவித்தது. ஐக்கிய மக் கள் சக்தியின் பல நாடாளுமன்ற உறுப் பினர்கள் தற்போதைய ஜனாதிபதியை ராஜினாமா செய்யுமாறு வலியுறுத்தி நாடாளுமன்றத்துக்குள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களின் ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்றம் சற்று நேரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# இலங்கையை உன்னிப்பாகக் கவனிக்கின்றது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸில்

இலங்கையில் நிலவும் அரசியல் குழப்ப நிலைகள் குறித்து உன்னிப்பாக அவதானித்து வருவதாக, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸில் அறிவித்துள்ளது.

இலங்கை தொடர்பாக மனித உரிமைகள் கவுன்ஸில் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெறும் அமைதியான போராட்டங்கள் மூலம் மக்கள் தங்களது பிரச்சினைகளை வெளிப்படுத்தும் நிலையில், அந்த உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை அறிவித்துள்ளது.

போராட்டங்களின் போது அமைதியை நிலைநாட்ட ஜனநாயக ரீதியாக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் சர்வதேச சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டவையாக அமைய வேண்டும் என்றும் மனித உரிமைகள் பேரவை வலியுறுத்தியுள்ளது.

இந்த நெருக்கடி நிலைமையைத் தணிப்பதற்கான அரசாங்கத்தின் இயலுமை இராணுவமயப்படுத்தப்பட்ட நகர்வுகளில் தாக்கம் செலுத்தியுள்ளதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தச் சூழ்நிலையில் அரசாங்கம், அரசியல் கட்சிகள் மற்றும் குடிசார் அமைப்புகள் என்பன இணைந்து பேச்சு நடத்தி பொருளாதார நெருக்கடிக்கு வினைத்திறனான தீர்வினை எட்ட முயற்சிக்க வேண்டும் என மனித உரிமைகள் கவுன்ஸில் வலியுறுத்தியுள்ளது.

# தமிழ் முற்போக்குக் கூட்டணியினரின் போராட்டம் இன்று தலவாக்கலையில்

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் அரசுக்கு எதிரான போராட்டம் இன்று தலவாக்கலை நகரில் நடக்கும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தலவாக்கலை நகரில் தமிழ் முற்போக்கு கூட்டணி அரச எதிர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்கத் திட்டமிட்டிருந்த நிலையில் ஊரங்கு சட்டம் காரணமாக அது பிற்போடப்பட்டது.

அந்தப் போராட்டத்தை இன்று நடத்த உள்ளதாக தமிழ் முற்போக்குக் கூட்டணியின் இணைத் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இந்தப் போராட்டத்தில், கட்சி, தொழிற்சங்க பேதமின்றி அனைவரும் பங்கேற்க வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் இணைத் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் அழைப்பு விடுத்துள்ளார்.

# சால்வையைத் துறந்த சமல்!

எப்போதும் சிறப்பு நிற சால்வையை அணிந்திருக்கும் முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் சால்வையின்றி சபையில் பிரசன்னமாகியிருந்தார்.

சமல் ராஜபக்ஷவிடம் ஏற்பட்டிருந்த இந்த மாற்றம் குறித்து பலரும் பேசிக் கொண்டமையைக் காணமுடிந்தது.

சமல் ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சியின் முன் வரிசையில் நான்காவது ஆசனத்தில் அமர்ந்திருந்தார்.

இதனிடையே, சால்வை அணியாதமை குறித்து ஊடகவியலாளர்கள் குழு அவரிடம் கேள்வி எழுப்பிய போது, அவர் உறுதியான பதில் அளிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சால்வையால் பயனில்லை. எனக்கு ஆடை வேண்டும் என சமல் ராஜபக்ஷ கூறியுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




---

## ஜனாதிபதி ஆட்சி...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அதே அரச கட்டமைப்பைத் தொடர்கிறீர்கள். கடவுளின் பேரால் கேட்கிறேன். விழித்தெழுங்கள். உங்கள் தலைவர் கூட்டாட்சிமுறைமைஎன்பதுபிரிவினைவாதம் என்று பொய் கூறி உங்களை ஏமாற்றியே வந்துள்ளார்கள்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தை மேம்படுத்துவதற்கு அந்த மாவட்டத்தைச் சேர்ந்த ராஜபக்ஷ குடும்பத்தினர் ஆட்சிக்கு வரவேண்டியுள்ளது. இதுபோன்று நாட்டின் இதரபகுதிகள் மேம்படுத்தப்பட வேண்டாமா? நாட்டின்எல்லாவிடங்களும் மேம்படுத்தப்பட வேண்டுமானால் ஒற்றையாட்சிமுறைமைஎன்றகருதுகோளை நீங்கள் கைவிடவேண்டும். தமிழ்த் தேசத்தையும் சிங்கள தேசத்தையும் அங்கீகரிக்கும் கூட்டாட்சி முறைமைதான் இதற்கு ஒரே வழி என்பதனை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அதுவே நாட்டை முன்னேற்ற ஒரே வழி.